செந்தமிழ்

தொகுதி 78 ஜூன் '84 பகுதி 2

—இந்த இதழில்—

மலையாளத்தில் சங்க இலக்கியப் பாடல்கள்

ஏறு தழுவுதல் — பல வகை

பாரதியும் சித்தரும்

பைந்தமிழ்க் காவலர் பெரியசாமி

THE MADURA TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்கம் — மதுரை - 1

செந்தமிழ்

தொகுதி 78 ஜூன் 1984 பகுதி - 2

உள்ளே

எண்	பொருள்	பக்கம்
	முன்னுரை	
1.	மு வரதராசன் நாவல்களில் சொற்போர்முறை திருமதி மா. தையல்நாயகி	53
2.	இல்லாள் தஞ்சை மணவழகன்	59
3.	நினைவுகள் ஒன்றே பால எல்லப்பபிள்ளை	60
4.	மலையாளத்தில் சங்கத்தமிழ் அகப்பாடல்கள் டாக்டர். கி. நாச்சிமுத்து	64
5.	ஏறு தழுவதல் — பலவகை அசாமி	75
6.	பாரதியும் சித்தரும் டாக்டர் மு. மாணிக்கம்	78
7.	அறிவியல் வினாவிடை — திரையன்	88
8.	தமிழ் இடப்பெயராய்வு—நூல் மதிப்புரை டாக்டர் சு. வேங்கடராமன்	90
9.	பைந்தமிழ் காவலன் பெரியசாமி டாக்டர் ச. சாம்பசிவன்	92

முன்னுரை

மூன்று திங்களுக்கு ஒரு முறை உங்களைக் காணுகின்ற மகிழ்ச்சியில் ஏராளமான செய்திகளைப் பகிர்ந்து கொள்ளும் ஆர்வம் மேலிடுகிறது. 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'. என்கிறான் பாரதி. சங்கச் சான்றோ-ரால் எழுதப்பட்ட அக இலக்கியப் பாக்கள் சிலவற்றை மலையாள மொழியில் பெயர்த்தெழுதப்பட்டதைக் குறித்து ஒரு கட்டுரை வெளி-யாகியுள்ளது. மு.வ. நாவல்கள் பற்றிய தொடர் கட்டுரையும் இவ்-விதழில் இடம் பெறுகின்றது. செந்தமிழ் அன்பர்கள் அதிர்ச்சி அடைய கூடிய நிகழ்ச்சியினையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. தமிழ்ச்சங்க வளர்ச்சிக்கும், தமிழின் முன்னேற்றத்திற்கும் நிலைத்த தொண்டு செய்தவரும் தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்-பினரும், சங்கச் செயலாளரும், கோச்சடை பெருநிலக்கிழாரும் ஆகிய திரு டி. பி. எம். பெரியசாமி அவர்கள் சூன் திங்கள் - 3- ஆம் நாள் இயற்கை எய்தினர்கள். அவர்களோடு அன்புடன் பல்காலும் பழகிய பேராசிரியர். டாக்டர் சாம்பசிவனார் அவர்கள் டி.பி,எம் அவர்களைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை ஒரு கட்டுரையாக அளித்துள்ளார்கள். டி.பி.எம். அவர்களின் தன்னலமற்ற தொண்டும் தமிழ்ப்பற்றும் நமக்கு வழிகாட்டும் என்பது உறுதி. தமிழ் அன்பர்-களின் உறவும், பாசமும் தொடர்ந்து நீடிக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த இதழ் உங்களை நாடி வருகிறது.

—பொறுப்பாசிரியர்

மு. வரதராசன் நாவல்களில் சொற்போர் முறை

திருமதி மா. தையல் நாயகி

திருச்சி

செந்தாமரை, பாவை ஆகிய நாவல்களில் காதலே முக்கியக் கருவும் கருத்துமாகும். காதலின் இருவேறுபக்க விவாதங்களும் சொற்போர் முறையில் எடுத்துரைக்கப்பட்டிருந்தாலும், மு.வ. வின் பார்வை நேரியது, ஒரு பக்கம்சார்ந்ததல்ல. பாவையில் புதுமை உணர்வு மிக்க, இடைக்கால மரபு மீறிய, ஆனால் சங்க கால மரபு தழுவிய காதல் இறுதியில் வெற்றிவாகை சூடுகிறது; பெற்றோரின் சம்மதத்தோடு, காதலர் கடிமணம் புரிகின்றனர் செந்தாமரை, புதுமை உணர்வு கொண்ட காதலுக்கும் பழைய மரபு சார்ந்த காதலுக்கும் ஒரு பாலமாக அமைந்த திருநாதன்—திலகம் தம்பதியரின் காதலைப் போற்றுகிறது.

செந்தாமரையில் மூன்று வகையான காதலர்கள்—புதுமை உணர்வு மிக்கவர்கள் இளங்கோவும் செந்தாமரையும். மரபு தழுவியர்கள் மருதப்பரும அவர் மனைவியும் புதுமையில் நாட்டமும் மரபில் மதிப்பும் கொண்டவர்கள் (திருநாதனும் திலகமும்)—மாறி, மாறிக் காட்டப்பட்டுள்ளனர் இந்த நாவலில் மு.வ தன் விருப்பத்தை, தான் தேர்ந்த காதல நெறியை வெளிப்படையாகக் கூறாமல், அவர் விருப்பு, வெறுப்புகளில் மிதவாதப் போக்குடையவர் என்பதற்கிணங்க, புதுமையும பழைமையும் கலந்த ஒரு நெறி நிற்கும் தம்பதியரையே போற்றுகிறார். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்தான், இளங்கோவும் செந்தாமரையும புதுமை உணர்வு கொண்டவர்கள் என்பது பொருந்தும். புதுமை உணர்வு என்பது காதல், வீரம், இயற்கை. அழகு, நம்ப முடியாத செயல்கள், நடக்க முடியாததை நம்ப வைத்தல், மரபு கடத்தல் அல்லது மீறல், இறந்த காலத்தில் ஈடுபாடு, குழந்தைத் தனத்தைப் போற்றல, உணர்ச்சி மிக்க நிலை. கட்டுப்பாடற்ற சுதந்திர உணர்வு, தனிமனிதனின் உள்ளுணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டுதல், தனித் தன்மை போன்ற எத்தனையோ கூறுகளைக் கொண்டது. இது ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அடங்குவதன்று. இளங்கோவும செந்தாமரையும், உணர்ச்சி மிக்கவர்கள். சுதந்திர மனப்போக்குக் கொணடு, கட்டுப்பாடுகளை எதிர்ப்பவர்கள் என்ற முறையில் அவர்கள் காதல் புதுமை வழியில் வந்ததாகக் கூறலாம். மறுபுறம் பார்த்தால், உண்மைக் காதல் ஒருமுறைதான் மலரும் என்ற பழைய கோட்பாட்டை மீறி, இருவருமே இரண்டாம, மூன்றாம முறையாகக் காதல் வயப்படுகின்றனர். ஆழ்ந்த ஈடுபாடோ, அன்போ இல்லாமல், ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளாத ஆரம்ப நிலையிலேயே தங்கள் உறவைக் காதலென எண்ணி, மணம் கொண்டு

மனம் ஒப்புகின்றனர். மருதப்பரும் அவரது இல்லாளும் நடத்திய பொருத்தமற்ற இல்வாழ்க்கை பற்றி இளங்கோவின் வழி மு-வ. கூறுகிறார்:

> இளங்கோ என்னை எள்ளினான்; எங்கள் குடும்பவாழ்க்கை, கல்லூரி மாணவனும் அரிச்சுவடிப் பையனும் சேர்ந்து படிப்பது போல என்று எள்ளினான்.

மருதப்பர் கதை சொல்லும் பகுதி முழுவதும் அடிக்கடி அவர் தனக்கும் தன் மனையாளுக்குமிடையே உள்ள வேற்றுமைகள் பற்றியும், அறிவார்ந்த வேறுபாடு பற்றியும் பேசுகிறார். ஆனால் அமைதியும் எளிமையுமே உருவான திருநாதனும் திலகமும தங்கள் காதலில் நிலையாக, உறுதியாக இருக்கிறார்கள் காதலில் தனது அவசர நடத்தைக்காக வருத்தப்படும் செந்தாமரை, மற்ற இரு தம்பதியரையும் சரியாக எடை போடுகிறாள்:

> மருதப்பரும் அவர் மனைவியும் நன்றாகத்தான் வாழ்கிறார்கள். ஆனால் ஒத்த அறிவோ காணோம். அவர் உலகத்தை நன்றாகக் கற்றிருக்கிறார். அவருடைய மனைவியோ குடும்ப வாழ்க்கையை நன்றாகக் கற்றிருக்கிறாள். எப்படியோ காதல் வாழ்வுதான் வாழ்கிறார்கள். படிப்படியாக முன்னேறியிருக்கிறார்கள் அண்ணனைச் சிறுவயதில் ஊமை என்று அக்காவும் நானும் பேசி வந்தோம். இப்போதும் ஏறக்குறைய அப்படித்தான் இருக்கிறான். தின்பண்டமோ, புதிய ஆடையோ, புத்தகங்களோ எவற்றைப் பற்றியும் அவன் அந்த நாளிலும் அலைந்ததில்லை; இந்த நாளிலும் அலைவதில்லை. பொறுமையாக இருந்து கிடைத்தபோது மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்வான் .... இப்போது அவனுடைய காதல் வாழ்க்கையும் அப்படித்தான் வீடு தேடி வந்தது. அண்ணி அவனுக்கு ஏற்றவள். அசையாமல் அதிராமல் ஊமைபோல் இருந்து அண்ணனுடைய உள்ளத்தை உரிமையாக்கிக் கொண்டாள்.
>
> (பக். 99 - 100)

பாவையிலும் இதே மூன்று வகைக் காதலர்களையும் காண முடியும். பாவை, பாவை - பழனியின் காதல் கதை; பெற்றோ-ரால் ஊரைவிட்டே விரட்டப்பட்ட பாவையும் பழனியும் சாமிநா-தன், கமலத்தின் உதவியோடு, சென்னையை அடைந்து அங்கு எழுத்தாளர் கண்ணப்பர். அவர் மனைவி மங்கையர்க்கரசியின துணையோடு, பெற்றோரின் ஒப்புதலோடு திருமணம் புரிகின்றனர். இக்கதையில் பாவ்யும் பழனியும் புதுமை உணா்வு கொண்ட, மரபு மீறிய காதலர் வகையைச் சார்ந்தவர்கள் கண்ணப்பரும் அவர் இல்லக் கிழத்தியும் பழைமை வழி நின்று முறைப்படி மணம் கொண்டவர்கள்; அவ்வளவு உள்ளப்பொருத்தம் உடையவர் களல்லர். சாமிநாதனும் கமலமும் மரபுப்படி சடங்கு மணம் புரித் தவர்களாயினும், உள்ள ஒருமையும் புதுமை நெறியில் நாட்டமும் கொண்டவர்கள். பாவை—பழனியின் காதலின் உறுதியை நாம கண்ணப்பர், பழனி வாயிலாக அறிகிறோம்:

> எவ்வளவு வீரம் வந்து விட்டது! ஒன்றும் தெரியாத பெண்! [பாவை] யார் வீட்டுப் பெண் யாரோடு வருகிறாள்? எனக்குத் [பழனி] தன் வாழ்வையே ஒப்படைத்து விட்டாளே.
> (பக். 146)

> நானும் [கண்ணப்பர்] எத்தனைபோ காதலரைப் பார்த்-திருக்கிருன்றேன். இவன் [பழனி] அவர்களைப் போல் இல்லை. உறுதியும் உண்மையும் நிரம்பியவன்,
> (பக், 185).

> ஆனால் பழனியும் பாவையும் தனிவகையானவர்கள் என்று தான் எனக்குப் [கண்ணப்பர்] படுகின்றது. இவர்கள் மாற மாட்டார்கள். (பக். 186)

பாவை, கமலம், மங்கையர்க்கரசி ஆகிய மூன்று பெண்களின் முவ்-வேறுபட்ட குணநலன்களைப் பாவையின் சிந்தனை வாயிலாக அறிய முடிகிறது:

> ''கமலத்தின் அறிவு எங்கே? இந்த அம்மையாரின் அறி-யாமை எங்கே? என்று நினைந்து வியந்தாள் [பாவை] ...... இரண்டு முழக் கூந்தலை அரிந்து எறிந்து மண்ணாக

விட்டு விட்டு அன்பு வாழ்வே பெரிது என்று வந்தவளுக்கு இந்த ஆடம்பர வாழ்வின் உபதேசம் உள்ளத்தில் சிரிப்பாக இருந்தது.
(பக். 158)

செந்தாமரையில் மு.வ. புதுமையுணர்வோடு மரபு வழிப்பட்ட கற்பு நெறியில் நிற்கும் திலகத்தையும் திருநாதனையும் சிறந்த காதலராகத் தேர்வு செய்வதோடு, அந்த முடிவை ஒழுக்க நெறியில் அவ்வளவு பிடிப்பில்லாத செந்தாமரையையே சொல்ல வைக்கிறார். அதற்குக் காரணம், அந்நாவலில் புதுமையுணர்வு மட்டுமே கொண்ட செந்தாமரையும் இளங்கோவும் அலையும மனம் படைத்தவர்களாய் இருக்கின்றனர். பாவையில் கண்ணப்பர் மூலம் பாவை, பழனி காதலின் உண்மையையும் உறுதியையும் உள்ளத்தையும் நாவலாசிரியர் புகழ்கிறார்.

இவ்விரு நாவல்களும் மு வ,வின் ஆரம்பகால நாவல்களாகையால், சொற்போர் முறையைப் பயன்படுத்துவதில் மு.வ. அவ்வளவு வெற்றி பெற்றார் என்று கூறமுடியாது. அதனால் வாசகர்கள் தான் ஊன்றிப் படித்து, காதலின பல தன்மைகளும் நிலைகளும் காட்டப்பட்டிருப்பதைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. சாதாரண வாசகர் இந்தக் கூறுகளைக் கவனிக்காமல் மேலோட்டமாகச் செல்லக் கூடிய வாய்ப்புக்கள் நிறைய உள.

பாவையில் இதே காதற்கரு, காதலர், அவர்கள் காதலை எதிர்க்கும் பெற்றோர் என்ற இரு வேறு வாதி, பிரதிவாதிகளின் மூலம் விவாதிக்கப்படுகிறது. பழனி—பாவையின் பெற்றோரும், ஏகாம்பரஞ் செட்டியார் போன்ற கிராமவாசிகளும் பாவை, பழனியை ஊரைவிட்டே துரத்துமளவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இரண்டு, மூன்று ஆசைநாயகிகள் இருந்தாலும் பரவாயில்லை, வேறு சாதிப் பெண்ணை மணப்பது தான் பெரிய குற்றம் என்றிருந்த காலத்துக் கதை இது. பழனி பாவையின் உண்மையான காதல், பழனி, பாவையைத் தான் தன்னால் மணக்க முடியும் எனச் செட்டியாரிடம் உறுதியாகக் கூறுமிடத்திலும் (பக் 56-60), தன் மாமன் அண்ணாசாமி, சித்தி முதலியோரின் கொடுமைக் கரங்களிலிருந்து விடுபட்டுத் தனித்து வந்தாவது பழனியைச் சேர வேண்டும் என்ற பாவையின் உறுதியான மனத்திலும் (பக்-111-120) ஆர்க்காட்டிலிருந்து பழனிக்குக் கடிதம் எழுதி

வரவழைத்த அவளது துணிவிலும் (பக். 128-9), அவர்கள் எல்லா-வற்றையும் மறந்து காதலே பெரிதெனச் சென்னைக்குப் பயணமானதிலும் (பக். 144-9) வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. அவர்கள் பெற்றோர், கலப்பு மணத்திலும், இவ்வகைக் காதலிலும் கொண்ட வெறுப்பு, அவர்கள் பாவையை வேலூருக்கு அனுப்பியதிலும் (பக்-87), பழனிக்கு வேறு பெண் தேடியதிலும் (பக்-53) பழனி, பாவையோடு போய்விடக் கூடாதே என்ற பயத்தில் பழனியை ஆர்க்காட்டில் தேடியலைந்ததிலும் (பக்.142-3) தெரிகிறது. பாவை-பழனியின் இறவாக் காதலும் அவர்கள் பெற்றோர்கள் சமுதாயத்திற்குப் பயந்து. அவர்களைப் பிரிக்க எடுத்த முயற்சியும் மாறி, மாறிக் காட்டப்பட்டுள்ளன. பழனியின் உறுதியான காதல் மனம் அவன் ஏகாம்பரச் செட்டியாரிடம் பேசுகையில் வெளியாகிறது.

> நான் [பழனி] வாழும் வாழ்வுக்கு ஒரு நல்ல துணை வேண்டும்; நான் பேசும் பேச்சைக் கேட்பதற்கு ஒரு நட்பு வேண்டும்; நான் எண்ணுவது போல் சேர்ந்து எண்ணு-வதற்கு ஒரு மனம் வேண்டும். அதனால் தான் நான் பாவையைத் தேடுகிறேன். அவர்களைப் [அவன் முன்-னோர்களை] போல் ஒருத்தியை விரும்பி ஒருத்திக்குத் துரோகம் செய்ய என்னால் முடியாது. (பக்-60)

பழனி, தான் மட்டும் உறுதியுடன் இருக்கவில்லை; தன் துணைவி-யும் உண்மையும் உறுதியும் மிக்கவள் என்பதையும் சரியாக அறிந்திருந்தான்.

> ... அவளுடைய [பாவை] கள்ளமற்ற உள்ளத்தையும், அந்த உள்ளம் நிறைந்த அன்பு காரணமாக அவள் படும் துன்பத்தையும் எண்ணினான்; குழைந்தான்; குழந்தை-யானான். (பக்.146)

பழனியின் தந்தையின் பண்பாடில்லாத கருத்துக்களும் பழமையில் ஊறிய எண்ணங்களும், ஏகாம்பரஞ் செட்டியாரின் சொற்களில் வெளிப்படுகிறது:

> தகப்பனார் [பழனியின்] அதற்கு உடன்பாடாக இருக்கிறார். முதலில் திருமணம் ஒன்று சாதிப் பெண்ணாகப் பார்த்துச் செய்துகொள், பிறகு இந்தப் பெண்ணையும் [பாவை] வைத்துக்கொள் என்கிறார் (பக். 57)

அவர்கள் பெற்றோரின் பிள்ளைப் பாசம், சமுதாய கவுரவத்தைப் பற்றி அவர்கள் கொண்ட கவலையை வெற்றி கொள்ளவே. நாவலின் இறுதியில் பாவை-பழனியின் காதலை அவர்கள் பெற்றோர் ஏற்றுக் கொண்டு, இறுதியில் திருமணத்திற்கும் உடன் படுகின்றனர். இந்தக் கதை முழுவதுமே சங்க இலக்கிய மரபை யொட்டி எழுதப்பட்டமையால், ஆசிரியரைக் கதை முடிவிற்குப் பொறுப்பாக்கிக் காட்டுவதில் அவ்வளவு பொருளில்லை, எனவே முடிவு மு.வ.வுடையதல்ல; இலக்கிய மரபுப்படி, உடன் போக்குப் போன காதலர் மணம் கொள்ளவே செய்வர்.

செந்தாமரையில் ஒரு உறுதியான முடிவிற்கு மு.வ. வர-வில்லை. புதுமை உணர்வும் மரபு வழியில் மதிப்பும கொண்ட திலகம், திருநாதனைச் சார்ந்து நிற்பதோடு, செந்தாமரை, இளங்கோவின் அலையும் மனதையும் அவர் மன்னிக்கிறார். பாவையில் புதுமை உணர்வு கொண்ட காதலர் வெற்றி பெறு-கின்றனர். ஆயினும் பாவையின் முடிவு ஆசிரியரின் சொந்த முடிவல்ல; அது சங்க இலக்கியத்தின் அடியொற்றியெழுந்த கதையாதலின், அதில் காதலரின் உரிமை வாழ்வும், உண்மைக் காதலும் வெற்றி பெற்றேயாக வேண்டும். மு.வ. முற்றிலும் புதுமை உணர்வையோ, பழமை வழியையோ போற்றுதற்கு மற்றொரு காரணம் அவர் வாழ்ந்த காலத்துச் சமுதாயச் சூழல். வாணிக முறையிலான காதலையோ, உணர்வுகுறைந்து அறிவு பூர்வமான காதலையோ, ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவு மேலை நாட்டு மக்களைப்போல நம்நாட்டு மக்கள் முதிர்ச்சியும் முன்னேற்றமும் பெற்றிருக்கவில்லை. ஒருபுறம் மக்கள் இன்னும் பழமை வாதி-களாகவும், மூடநம்பிக்கையில் அமிழ்ந்து போனவர்களாகவும், அஞ்ஞானத்தில் ஆழ்ந்தவர்களாகவும் பிற்போக்கு மனப்பாங்கு கொண்டுள்ளனர். மற்றொருபுறம், சிறிது சிறிதாக வரதட்சிணைக் கொடுமையை ஒழித்து, பெற்றோர் முடிக்கும் கட்டாயக் கல்யாண முறையைக் குறைத்துக் காதல் மணங்களை, கலப்பு மணங்களை ஆணும் பெண்ணும் தாங்களே தங்கள் வாழ்க்கைத் துணைவர்-களைத் தேர்ந்தெடுத்து வாழவேண்டுமென்ற உரிமை வாழ்க்கையைப் பாராட்ட வேண்டுமென்ற புத்தெழுச்சி நம்மிடையே ஏற்பட்டு வருகிறது. இந்த இருவேறு இயல்புடைய சமுதாய அமைப்பின் தாக்கமும் மு.வ. வின் கருத்து மாற்றங்களுக்கும் இறுதித் தொகுப்புக்-களுக்கும் காரணம் எலாம்.

(தொடரும்)

இல்லாள்

''தஞ்சை மணவழகன்''

வரவ றிந்து செலவு செய்யும்
வகை யறிந் தவள்—முழுத்
திறமை யுடன் நற்கு டும்பம்
செய்யத் தெரிந் தவள்!
பண்பு டனே யாவ ரோடும்
பழகி வரு பவள்—தன்
உறவி னருக் குதவி செய்து
உள்ளம் நிறை பவள்!

(வரவறிந்து)

பொருத்த மாகச் சமையல் செய்து
புசிக்கத் தரு பவள்—வீட்டில்
வருத்த மின்றி எல்லோ ரையும்
விழைந்து ஏற் பவள்!
மருத்து வமும் அறிந்தி ருக்கும்
மாண்பு மிகுந் தவள்—சேயைக்
கருத்து டனே கண்ணைப் போன்று
காக்கத் தெரிந் தவள்!

(வரவறிந்து)

ஒழிந்த போது உடைவெ ளுத்து
உதவும் குணத் தவள்—மேலும்
கிழிந்த துணி த(ன்)னைத் தைக்கும்
குழைந்த மனத் தவள்!
குழந்தைச் செல்வம் தன்னை ஈன்று
களிப்பு அடை பவள்—குடும்ப
நலத்தி னிலே ஆர்வ முடன்
நாளும் உழைப் பவள்!

(வரவறிந்து)

கள்ள மின்றி வாழ்க்கை யாற்றைக்
கடகக் தெரிந் தவள்—கனிந்த
உள்ளத் தோடு ஏழைக் குதவும்
உண்மை அறிந் தவள்!
இல்ல றமாம் தோணி தன்னை
இயக்கும் இனி யவள்—அருள்
வல்ல தெய்வம் தன்னை நித்தம்
வேண்டிப் பணி பவள்!

(வரவறிந்து)

—(0)—

நினைவுகள் ஒன்றே

(புலவர், பால எல்லப்ப பிள்ளை —
புதுவை.)

சி.சுப்பிரமணிய பாரதியார். ஒரு அமரகவி, அவர் வாழ்ந்த காலத்திலிருந்த அரசியல் நிலை, ஆட்சி நிலை, சமூக நிலை, இறைவணக்கம், இயற்கை வருணனை ஒற்றுமை முதலிய வற்றைப் பற்றிப் பல பாடல்களை இயற்றியுள்ளார் என்பது குன்றின் மேலிட்ட விளக்குபோல் யாவரும் அறிந்ததேயாம்.

அவர் பாடிய பாடல்களில் பாரததேசம் என்று பெயர் சொல்லுவார் ... என்று தொடங்கும் பாடலில், ''வங்கத்தில் ஒடி வரும் நீரின் மிகையால், மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்'' ... என்றும்; சுதந்திரப்பள்ளு ... என்ற பாடலில, ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம்'' ...... என்றும் இசைத்துள்ளார்.

இவற்றைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்தனை செய்யும்போது, உழவுக்கும் தொழிலுக்கும் நம்முன்னோர்களைப் போலவே அவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதாம்.

திருவள்ளுவரும் தாம் இயற்றிய திருக்குறள் என்ற நூலில், உழவுக்கென்றே ஓர் அதிகாரம் அமைத்துள்ளார் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெற்றெனத் தெரிகிறதன்றோ?

JEAN DE LA FONTAINE - ''ழான் தெலா f போன்தேன் ''என்ற தலை சிறந்த பிரஞ்சுக் கவிஞர் 1621 - முதல் 1696 வரையில் வாழ்ந்தவர் - CHATEAU THIERRY ''ஷத்தோ தியேரி'' என்ற ஊரில் பிறந்தவர். அவர் இயற்கை, தாவரம், பறவை, விலங்கு, மக்களின் செயல் இன்னும் பிறவற்றைப் பற்றியும் பிரஞ்சு மொழியில் கவிதைகள் பல புனைந்துள்ளார், — கவிதைகளின் மூலம் அவர் மக்களுக்குப் பல நல்லுரைகளை நவின்றுள்ளார்.

அவர் LE LABOURUER ET SES ENFANTS- (லெ லபூரேர் எ சே ஆன்fபான்). ''உழவரும் அவர் தம் பிள்ளைகளும்''

என்ற தலைப்பில் ஒரு கவிதை இயற்றி இருக்கின்றார். உலகம், என்ற தேருக்கு உழவர், அச்சாணி போன்று விளங்குகிறார்கள். மேலும், உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' அல்லவா? உழைத்தால் தானே உயர்வு அடைய முடியும். எனவே, அவர் இயற்றிய கவிதையின் கருத்தைக் காண்போம்.

பிணியால் பீடிக்கப்பட்டிருந்த முதியவரும், செல்வருமான உழவர் ஒருவர் தன்னுடைய எதிர்கால மரணத்தைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டு இருந்தார். அவர் தன்னுடைய பிள்ளைகளை அருகில் அழைத்து அமர்த்திக் கொண்டு, பிறர் அறியா வண்ணம், முழு நம்பிக்கையுடன் மெதுவாக மொழியத் தொடங்னார். வாழ்க்கைக்குப்பயன் படக்கூடிய அறிவுரைகளை அவர்களிடம் தெளிவாகவும், சிலவற்றை மறை பொருளாகவும் பகர்ந்தார்.

என்னுடைய மறைவிற்குப் பிறகு முறைப்படி உங்களுக்குக் கிடைக்கக் கூடிய நிலத்தை விற்றுவிடாதீர்கள். ''வாழையடி வாழையாக'' நம்முடைய முன்னோர்கள் வழியே வந்து நமக்குக் கிடைத்த சொத்தாகும் அந்நிலத்தின் அடியில், ஒரு புதையல் மறைந்திருக்கிறது. ஆனால் அப்புதையல் எந்த இடத்தில் மறைந்திருக்கிற தென்று எனக்குப் புலப்படவில்லை - துணிவுடனிருத்தல் வேண்டும். நான் நவின்றதைப்போல் நீங்கள் செய்தல் வேண்டும் உழையுங்கள் - சிரமப்படுங்கள் - முயன்றால் மறைந்துள்ள புதையல் கிடைக்கும் என்றார் தந்தை

''உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு

மேலும்

''நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு''.

எனவும் பொய்யா மொழியார், நிலையாமையைப் பற்றிப் பகர்ந்தவை பொய்யாகுமோ? தந்தையும் வள்ளுவர் வாய்மொழிக்கு மேற்கோளாக மறலியின் கரங்களில் சிக்குண்டு மறைந்தார்.

பின்னர், பிள்ளைகள் தம்தந்தை அறிவித்த அறிவுரைகளின் படியே நன்றாய் நிலத்தைப் பலமுறை உழுதனர் - ஆழ்ந்து பார்த்தனர், புதையல் கிடைக்கவில்லை.

மனச்சோர்வடையாமல், விடா முயற்சியுடன் நிலத்தில் தானியத்தை விதைத்தனர். நீர்ப்பாய்ச்சினர். நாளடைவில் பயிர் விளைந்தது. ''ஏர் உழுதலினும் சிறந்த எரு போடுதல் நல்லது'' மேலும், களை எடுத்த பின்னர், நீர் பாய்ச்சுவதை விட பயிரை விழிப்புடன் காத்தல் மிகவும் நல்லது.

''ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு''

காலத்தோடு பயிர் நன்றாய் வளர்ந்து, கதிர்கள் முற்றி, அறுவடைக்குத் தகுதியாக இருந்தன. அறுவடை செய்து தானியத்தை விற்றனர். ஏராளமான பணம் கிடைத்தது. தந்தை மறைவிற்கு முன் மொழிந்த கருவூலம், புதையல் எது எனில், ''உழைப்பு நிறைந்த உழவுத் தொழிலே தான்.'' என்று உணர்ந்தனர்.

நான்காவது HENRI (*ஆன்றி*) அரசனின் அமைச்சர் SULLY (சுல்லி) என்பவர் ''*உழவும், பசும்புல் நிறைந்த மேய்ப்பிடமும்*'' *பிரஞ்சு நாட்டின் இருதனங்கள் போன்றவை* என்றார்.

LE LABOURAGE ET LE PATURAGE SONT
லெ லபுராழ் எ லெ பத்துய்ராழ் சோன்
IES DEUX MAMELLES DE LA FRANCE.
லே தெ மம்மேல் தெ லா பிரான்ஸ்..

இவ்வாறு மேனாட்டுக் கவிஞரும், அமைச்சரும் பாரதியாரைப் போலவே உழவுக்கும், உழவர்க்கும் பெரிதும் உழைக்கும் கால்நடைகளுக்கும் உயர்வளித்துள்ளனர்.

பாரதியாரின் பாப்பா பாடலில்,

''ஓடி விளையாடு பாப்பா. - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா ......''

என்று இசைத்துள்ளார். VICTORHURD *விக்தோர் உய்கோ* என்பவர் பிரெஞ்சுநாட்டு கவிஞரும், சிறந்த எழுத்தாளருமாவர். 28-2-1802 ஆம் ஆண்டில், BSANCON

(பெஜான் சேரன்) என்ற ஊரில், ஒரு பழைய இல்லத்தில் தம் பெற்றோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர். பின்னர் 12-10-1822 - இல் தம்முடைய இருபதாவது வயதில், தாம் விரும்பிய பெண்ணைக் கடிமணம் புரிந்து கொண்டார். எண்பத்து மூன்று வயது வரையில் வாழ்ந்து. 28-5-1885 ஆம் ஆண்டில் மறைந்தார்.

விக்தோர் உய்கோ என்ற பிரஞ்சுக் கவிஞர், சிறுமியர் வட்டமாய் நின்று ஆடும் ஆட்டத்தைப் பற்றிப் பாடிய, LARONDE (லா ரோந்த்) என்ற பிரஞ்சுப் பாடலின் கருத்து பின் வருமாறு.

பாட்டு

(1) வட்டமாய் நின்று சுறுமியரே!
வளைந்து நடனமாடு வீரே!
பொலிவாய் வளைந்து ஆடா விடில்
பூதரும் மரங்களும் நகைத்திடுமே!

(2) வட்டமாய் நின்று பேதையரே!
வளைந்து நடனமாடு வீரே!
பாங்காய்ச் சுழன்று ஆடா விடில்
பள்ளிச் சிறுவரும் பரிகசிப்பர்!

(3) வட்டமாய் நின்று வனிதையரே!
வளைந்து நடனமாடு வீரே!
பறவைகள் தங்கள் சிறகடித்தே
பாடிப் புகழ்ந்து பறந்திடுமே!

இவ்வாறு நம் பாரதநாட்டுப் பாரதியாருக்கும் பிரஞ்சு நாட்டுக் கவிஞர்களுக்கும் ''நினைவுகள் ஒன்றே எனலாம்,

மலையாளத்தில் சங்கத்தமிழ் அகப்பாடல்கள்

டாக்டர். கி. நாச்சிமுத்து

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம்

திருவனந்தபுரம். 695581

சுமார் 475க்கு மேற்பட்ட புலவர் பெருமக்கள் பாடிய சிறி-தும் பெரிதுமான 2381 பாடல்கள் அடங்கிய சங்க இலக்கியம் என்ற பழந்தமிழ்க் கவிதைத் தொகுப்பிலிருந்து 100 தலைப்பில் 66 கவிஞர் பாடிய அகப்பாடல்களைத் தற்கால மலையாளத்தில் மொழி பெயர்த்துச் சிறுவிளக்கத்தோடு பதிப்பித்திருக்கிறார் திரு-என்.வி. கிருஷ்ணவாரியர்.[1]

திணைக்கு 20 ஆக ஐந்து திணைக்கும் 100 தலைப்பில் இப் பாடல்களை அமைத்துள்ளார். அகநானூறு (38). குறுந்தொகை (24). நற்றிணை (22), கலித்தொகை(10), ஐங்குறுநூறு (6 பத்துக்கள்) ஆகிய ஐந்து அகநூல்களிலுமிருந்து இவற்றைப் பொறுக்கி எடுத்-துள்ளார். பரிபாடலிலுள்ள அகப் பாடல் ஒன்றும் இதில் சேர்க்கப் படவில்லை.

சங்க நூல்கள் முழுமையாகவும் பகுதியாகவும் முன்பு மலை யாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன[2].

---

1. (அகம் கவிதைகள் மொழி பெயர்ப்பு என். வி. கிருஷ்ண வாரியர், கேரள சாகித்ய அக்காதமி, திருச்சூர். 1981, பக். 176)

2. (ஆர். நாராயணப் பணிக்கர், *பதிற்றுப்பத்து முத்தொள்-ளாயிரம், புறநானூறு* எஸ்,டி. ரெட்டியார் பிறஸ் கொல்லம், முதற் பதிப்பு, 1958, பக் 16 + 112; ஜி வைத்தியநாத அய்யர், *பதிற் றுப் பத்து*, கேரள சாகித்ய அக்காதமி, திருச்சூர், முதற்பதிப்பு, 1961. பக். 28 + 296: வி.ஆர். பரமேஸ்வரன் பிள்ளை, *புறநா னூறு*, கேரள சாகித்ய அக்காதமி திருச்சி மு.ப. 1969. பக.559; எம்.நாராயணகுட்டி, *செந்தமிழ் முத்துகள்*, நேஷனல் புக் ஸ்டால், கோட்டயம். மு.ப. 1974. பக். 162; 35 சங்கம் கவிதைகள்; நென் மாற பி.விசுவநாதன் நாயர் *அகநானூறு* இரண்டாம் தொகுதி, மூலமும் உரையும், கேரள சாகித்ய அக்காதமி, திருச்சூர் மு.ப. 1982 பக் 555), எனினும் திரு.வாரியர் அவர்கள் முயற்சி சற்று வித்தியாசமானது.

"மூலப் பாடல்களைத் தெரிந்தெடுத்தது குறிப்பிட்ட கொள்கையின் அடிப்படையிலல்ல. வாசித்துக் கொண்டு போகும் போது ஏதாவது சிறப்புத்தகுதி உள்ளதாகத் தோன்றிய பாடல் மொழி பெயர்க்கப்பட்டது என்று மட்டும் கூறலாம்'' (பக்,29) என்பார் வாரியர். மேலும் அவர் நூல் செய்த நோக்கத்தைக் கீழ்கண்ட-வாறு உரைப்பார்:

''சங்க இலக்கியம் என்ற பொதுப் பெயரில் அறியப்படுகின்ற இந்த நூல்கள், தமிழருடையது மட்டுமல்ல கேரளீயருடையதும் ஆகிய இலக்கியப் பழஞ்செல்வத்தின் மிக முக்கியமான ஒரு பாகம் ஆகும். இந்த நூல்களைப் பற்றி ஓரளவாவது புரிந்து கொள்ளுதலும், அவற்றில் மிக முக்கியமானவைகளை நெருங்கி அறிந்து கொள்ளுதலும் செய்வது கேரளீயருடைய நல்ல இலக்கியப் பயிற்சியில் தள்ளவியலா ஒரு பகுதியாகக் கொள்ளப்பட வேண்டும்''. (ப.7)

''இவற்றில் வடமொழி இலக்கியத்தின் பாதிப்பை விரி-வாகவே காணலாம்என்றாலும், வடமொழி இலக்கியத்தினுடையதி-லிருந்து வேறான ஒரு பாரதீய இலக்கியமரபு இவற்றில் நிறைந்து நிற்கிறது. வடமொழி இலக்கியம் போலவோ, ஒருவேளை அதை விடவோ குறிப்புநுட்பம் அமைந்தது இந்த மரபு அத்தோடு கூடவே எளிமையின் இயற்கை நலத்தையும் அதில் காணலாம். இம் மரபை அறியவும் பின்பற்றவும் இயலாது போவது என்பது கேரளீயரைப் பொறுத்த அளவில் வருந்தத் தக்க ஒரு இழப்பாக இருக்கும். இன்று கேரளமென்று அழைக்கப்படுகிற நிலப்பகுதியில் தான் இந்த நூல்களில் பலவும் இயற்றப்பட்டன என்ற உண்மையும் சிறப்பாக நினைத்துப் பார்க்க வேண்டியதாகும்''. (பக்கம். 27-28)

''வடமொழிக்காவிய பரம்பரையிலிருந்து, வடமொழித் தொடர்பு மிக நெருங்கி ஏற்பட்டதன் பின்னரே வடிவம் கொண்ட மலையாளக் கவிதையின் மரபிற்கும் பழைய தமிழ்க் கவிதையின் மரபிற்குமுள்ள வேறுபாட்டையும் சிறப்பையும் அறிய இந்த மொழிபெயர்ப்பு உதவியாயிருக்குமென்று நம்புகிறேன் (ப.30)'' திரு. மு.இராகவையங்கார் சேரவேந்தர் செய்யுட்கோவை முதற்-றொகுதியின் நான்காம் பக்கத்தில் தொகுதி 1 கூறுவது இங்கு நினைக்கத் தக்கது :

"... தமிழ் வளர்த்த திறத்தில் சேரவேந்தர் எவ்வரசர்க்கும் குறைந்தவர் அல்லர். ஏனைத் தமிழரசரைப் பற்றி அமைந்த சங்கச் செய்யுட்களின் அளவிலும், சேரரைப் பற்றிய பாடல்களின் தொகை மிக அதிகமாகக் காணப்படுவதும், சேரவேந்தர்கள் பாடிய செய்யுட்களின் தொகையும் அவ்வாறே மிகுதிப் பட்டிருத்தலும் ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை".

மொழி பெயர்ப்பில் தான் கைக் கொண்ட முறைகளைக் கீழ்க்கண்டவாறு வர்ணிப்பார் திரு. வாரியர் :

"மிகவும் சுருங்கக் கூறும் ஆற்றலுடையது சங்கத்தமிழ். ஒருவேளை வடமொழியைவிடவும் சிறந்த சுருங்கக் கூறும் திறமையை இம்மொழி வெளிக்காட்டுகிறது". (பக். 29)

"ஒன்றோ இரண்டோ எழுத்துக்கள் மட்டுமுள்ள வினை, பெயர் அடிகளை ஒன்றன்மேல் ஒன்றாய்க் கோத்தமைத்துப்பழந் தமிழ்க் கவிஞர்கள் இச் சுருங்கக் கூறும் ஆற்றலைச் சாதித்துள்ளனர். பல சொற்களின் பல் பொருள் சுட்டும் ஆற்றலும் இதில் அவர்களுக்குத் துணை செய்தது. வடமொழியில் சில தொகைகளில் இருப்பது போலே விரிவாகச் சொல் தொக்கு நிற்றலையும் சங்க இலக்கியத்தில் காணலாம் (பக் 29)

"மலையாளம் இச்சுருங்கக் கூறும் ஆற்றலை என்றோ இழந்துவிட்டது. அதனால் மொழிபெயர்ப்பில் பலவிடங்களில் விரிவு தேவையாய் விட்டது. எனினும் மூலத்திலில்லாத ஒரு கருத்தையும் இந்த மொழி பெயர்ப்பினுள் சேர்க்கவில்லை. மூலத்திலுள்ள கருத்துக்களை இயன்ற மட்டில் விடாதிருக்க முயன்றுள்ளேன். மூலத்தின் யாப்பிசையோடு மிகவும் நெருங்கி வரும் யாப்பு வடிவங்களே மொழிபெயர்ப்பில் கொள்ளப்பட்டன. பாடல்களை வாசித்து அனுபவிப்பதற்குத் துணையாய விவரங்களும், அதிகம் வழக்கிலில்லாத சொற்களுக்குப் பொருளும்,புலவர்களையும், பாடலில் குறிப்பிடப்படும் புரவலர்களையும், பற்றிக் கிடைத்த செய்திகளும், ஒவ்வொரு பாடலுக்கும் பின்னிலுள்ள விளக்கப் பகுதியில் கொடுத்துள்ளேன். இதில் மேலும் கொஞ்சம் விரிவு கட்டாயம் வேண்டும். (பக் 30)"

திரு. கிருஷ்ணவாரியர் செறிவான சங்கத் தமிழ் மூலத்தைச் சுற்று விரிவாக மலையாளக் கவிதையில் மொழிபெயர்த்திருக்கிறார். (பாட்டு : 33, மூலம் (அகம் 263) 15 வரி, பெயர்ப்பு 30 வரி).

யாவும் சிறந்த மலையாளக் கவிதைகளாக வந்துள்ளன. சில இடங்களில் மூலத்திலுள்ள ஒலிப்படிமத்தைக் கூட மிக வெற்றிகரமாக மலையாளத்தில் கொண்டு வந்துள்ளார் (பாட்டு 26). அதோடு பல இடங்களில் பழைய மூலத்திலுள்ள சொற்களையே கையாண்டு ஒரு உயர்தனிச்செம்மை நிலையினையும் (classical atmosphere) ஐயும் உருவாக்குகிறார். கிருஷ்ண வாரியருடைய கவித்துவ ஆற்றலால் மொழிபெயர்ப்புப் பல இடங்களில் மூலத்தோடு போட்டி யிடுகிறது என்றே கூறலாம்: உறுதியாக இம்மொழி பெயர்ப்பு மிகுந்த கவனத்துடன் செய்யப் பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. எனினும் புகழ்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் இதிலுள்ள சில குற்றங்குறைகளை எடுத்துகூறுவதும் ஒரு கடமை அதனால் இது திரு. வாரியரின் நன்முயற்சியைக் குறைகூறுவதாகக் கொள்ளக் கூடாது. சங்க இலக்கியங்களை மொழிபெயர்க்கும் போது ஏற்படும் சிக்கல்களை விவாதிக்க ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு இங்கு சிலவற்றைச் சுட்டிக் காட்டலாம். இவற்றில் பல தமிழிலும் கூடப் பிரச்சினைகளாக உள்ளவையே.

சங்க இலக்கியத்தைப் புரிந்துகொள்ள பாட்டின் முதல் (நிலம், திணை, பொழுது) கரு. (பறவை, மக்கள்) உரிப்பொருள் (ஒழுக்கம்) முதலிய பின்னணிகள், பாத்திரங்கள் அவர்களின் கூற்று மரபுகள் முதலியன பற்றிய அறிவு தேவை. இவை இன்றி அவற்றைப் படித்துப் பொருள் விரித்தால் விபரீதமான விளக்கங்கள் எழுந்துவிடும். இதற்காகத் திரு. வாரியர் சங்க இலக்கியத் தொகை நூல்கள் பற்றியும், அகப்பொருளிலக்கணம் பற்றியும் சேர்த்துள்ள முன்னுரை பயனுடையதாகும்.

திணை மாற்றங்கள்

இத்தொகுப்பில் சில பாடல்கள் திணைமாற்றிக் கொடுக்கப் பட்டுள்ளன. இத்தொகுப்பிலுள்ள 54-ஆம் பாடலை (நற்றிணை:241) முல்லைத் திணை எனக் கொடுத்திருப்பது தவறு: அது பாலையைச் சேர்ந்தது. அது போன்றே 62-ஆம் பாடல் (குறுந் 399) மருதத் திணையைச் சேர்ந்ததாகக் கொடுத்துள்ளார். ஆனால் இது உரிப் பொருளடிப்படையில் குறிஞ்சியைச் சார்ந்தது. அது போன்றே 92-ஆம் பாடல் (நற்றினை : 242) முல்லைப்பாடல்-அதை நெய்தலாகக் கொடுத்திருப்பதும் தவறாகும்.

துறைக்கூற்றுகள்

ஒவ்வொரு பாடலிலும் இன்னார் இன்னாருக்கு கூறியது என்பதை விரிப்பதில் உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. எனினும் சில இடங்களில் திட்டவட்டமான நிலையும் உண்டு. அச்சூழலில் கூற்றை மாற்ற இயலாது. 65ஆம் பாடலைக் (நற்: 50) களவில் தலைவி தோழிக்குக் கூறுவது பொருந்தாது : ஏனெனில் கற்பில் தான் தலைவன் பரத்தையருடன் ஆடுவதாகக் கூறுவது மரபு. மேலும் பொதுவாகக் களவில் ஊடலும் இல்லை. எனவே இது முன்னோர் கொண்டபடி தோழி, பாணர்க்கு வாயில் மறுத்தது என்று கொள்வதே தக்கது. அது போலவே பாடல் 73- (நற்:216) தலைவி கூற்றன்று, முன்னோர் கொண்டபடி பரத்தை கூற்றே பொருத்தமாக இருக்கும். பாடல் 93 (நற்: 245) தோழி கூற்றே. வாரியர் தலைவி கூற்றாகக்கூறுவதும் பொருந்தாது. பாட்டு 70 (கலி. மருதம் 34) சான்றோர் கூற்று என இருக்க வாரியர் தோழி கூற்றாக எடுக்கிறார். பாடல் 86 - (அகம் 230) நெஞ்சிற்குக் கூறுவது என்பது மூலம்: பாங்கற்குரைத்ததாக இவர் எடுக்கிறார். அது போன்றே பாடல் 91 - (அகம். 180) தோழி தலைவனுக்குக் கூறியது என்பது மூலம்; வாரியர் தலைவி தோழிக்குக் கூறுவதாக கொடுத்துள்ளார். இவைகளும் விவாதத்திற்குரியவை.

மூலத்தில் இல்லாத புதிய கருத்துக்கள் அதிகம் மொழி-பெயர்ப்பில் வரவில்லை : எனினும் சில இடங்களில் குறிப்புப் பொருளாய்த் தோன்றுவதையும் மொழிபெயர்ப்பில் கொடுத்துள்-ளார்; கொடுக்க வேண்டும் என்று நினைத்தாலும் அவற்றை அடைப்புக்குறிக்குள் கொடுத்திருக்கலாம்; ஏனெனில் குறிப்பு (தொனி) படிப்போன் மனநிலையைப் பொறுத்தமைவதல்லவா?

ஏ-டு: பாட்டு 15 (திருப்தமாமோ) (குறுந்-362)

பாட்டு 41 (இக் கார்கால சந்த்யயில்) (குறுந்-108)

பாட்டு 45 (எந்நிட்டும் தோழிப்ரியளிங்நெத்தீலல்லோ) (அகம் 194)

இப்பாட்டில் ''திந்துவான் வந்நெத்திய'' (தின்பதற்கு வந்து சேர்ந்த)

''காற்றுபோல்'' முதலிய தொடர்கள் மூலத்தில் இல்லாதவை. அச் சூழலுக்குப் பொருந்தாதவை.

பாட்டு 64 (ஞங்ஙள் உறா குலஸ்த்ரீகள், அவளோ பரஸ்த்ரீயும்) (அகம் : 76)

பாடல் 99 இல் மூலத் தமிழ்ப் பாடலின் தொடக்க இரண்டு வரிகள் இவை:

ஓங்கு திரைப் பரப்பின் வாங்கு விசைக் கொளீஇத்

திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்

(அகம் 3.0)

அதன் மொழிபெயர்ப்பு :

ஓள முயரும் கடல்ப் பரப்பில்
நீளே செறு தோணி யேறியெத்தி
வீசி வலகளெறிஞ்நு, தம்மில்
வாசி பறஞ்நு வலிச்சு கேற்றி
கோரமல்ஸ்யங்ஙளெ முக்குவன்மார்
வாரிக் கரையில் சொரிஞ்ஞீடுந்து—

மொழிபெயர்ப்பு மிக அருமையாக உள்ளது. வாசி பறஞ்நு வலிச்சு கேற்றி முதலிய வர்ணனைகள் புதியவை. எனினும் ஒலிநயம், சூழல் ஆகியவற்றுக்குப் பொருந்தவே அவை அமைந்துள்ளன.

34-ஆம் பாட்டில்

என்நெஞ்சே,

நீ நீன்றெ பாடும் நோக்கியிங்ஙெங்ஙாளிருந்தாலும் (அகம் 149) என்ற வரிகள் திரும்பத் திருப்ப இரண்டு இடங்களில் வந்துள்ளன. ஆனால் அது மூலத்தில் இல்லை.

மொழிபெயர்ப்பில் சில இடங்களில் மூலத்திலுள்ள உவமைகள், அடைகள் முதலியன விடப்பட்டுள்ளன[3])

---

3. பாட்டு 42. களியட்டான் நிலையே போல் தடவுபுமுகையீன்று — கலி. முல்லை (1: 3)

பாட்டு 43. நரம்பார்ந்தன்ன வாங்குவள்பரிய — (அகம் 4 : 9)

பல இடங்களிலும் மூலத்திலுள்ள வாக்கிய அமைப்பை அவ்வாறே மொழி பெயர்த்துள்ள திறம் பாராட்டிற்குரியது. (எ.டு: 52 காணக் கடவு மதி (மூலம்) ''தெளிச்சாலும் ......காணட்டே ஞான் - மொழிபெயர்ப்பு.) எனினும் எல்லா இடங்களிலும் மூலத்திலுள்ள வாக்கிய அமைப்பை அவ்வாறே மொழி பெயர்ப்பில் அமைக்க இயலவில்லை. ⁴

பாட்டு 57 இல் (அகம் 354 புகுதல் வேண்டின் (விரும்பினமையால்) என்பது வீடணையும்போள் என மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. பாட்டு 100 (கலி : நெய்தல் 13 :) (19:21)

குடிபுறங்காத தோம்புஞ் செங்கோலான் வியன்தானை
விடுவழிவிடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழிச் தொடுவழி நீங்கிற்றால் பசப்பே

என்பது

''செங்கோல் பிடிச்சு குடிகளெக்காக்குந்ந
தம்புராள் பாண்டியன்றெ வீர ஸைண்யம்
செந் நேடம் செந்நேடம் சத்ருக்கள் பேடிச்சு
முன்னில் நிந் நோடி யொளிக்கும் பேலே
தொட் டேடம் தொட்டேடம் வைவர்ன்யம் போம்மட்டி
லெத்திப் புணர்ந்நான் உற்ருதயநாதன்''

என்ற அழகான பெயர்ப்பாய் வந்துள்ளது. பாண்டியன் என்பது உரையாசிரியர் தரும் விளக்கம். அதை மொழிபெயர்ப்பில் கொண்டு வந்துள்ளார். மூலத்திற்கும் இதற்கும் வாக்கியப் பொருளமைப்பிலும் மாற்றம் இருப்பதை நோக்குக அது போன்றே பாட்டு 70-இல் (கலி 99: 1-7) மூலத்திலுளள ஏழு வரிகளின் பொருளும் வித்தியாசமாகக் கொள்ளப்பட்டு மொழிபெயர்ப்பில் வந்துள்ளது. இது பொருத்தமில்லாத ஒன்றாகும்.

---

4. மூலம் (பாட்டு 37: 224) அருஞ்சுரம் முன்னியோர்க்கே என்பது சுரத்திலல்லீதன் மேனாரதம்' எனப் பெயர்ப்பில் வந்துள்ளது.)

சங்கத்தமிழில் காணப்படும் சில சொல்லாட்சிகள், இலக்கண முடிபுகள் என்றோ வழக்கிழந்தவை அவற்றின் ஆட்சி, பொருள் முதலியன மிகவும் சிக்கல் தருபவை. இதில் உரையாசிரியர்கள் பணி பெரிது. மொழி பெயர்ப்பை நோக்கும் போது மூலத்திலுள்ள சில சொற்கள் பிழையாக உணரப்பட்டதால் பொருந்தாத மொழி பெயர்ப்புகள் எழுந்துவிட்டன. ஒரு சில சான்றுகள் காண்போம்.

பாட்டு 33: (அகம் 263 : 13) இனிதிற் புணர்க்குவன் மன்னோ "விவோஉேறால்ஸவம் ரசிச்சென்னே கரம் பிடிச்சேகியேனே", தாய் தன் செயலாகக் கூறுவது பெயர்ப்பில் தலைவன் செயலாக வந்துள்ளது.

பாட்டு 65 (நற் : 50 : 5) தாக்கல் என்பதற்கு எதிர்ப்படல் என்பது பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் உரை. தேகத்தில் முட்டுதல் என்று வாரியார் பொருள் கொள்கிறார். இது பொருந்துமா என்று தெரியவில்லை.

பா : 71 : நற் : 90: 3: வறனில் புலத்தி என்றால் வறுமையில்லாத வண்ணாத்தி எனபது பொருள்.

'பாவமாம் வண்ணாத்தி' என்ற பெயர்ப்பு பொருந்தாது.

பாட்டின் கீழே வரும் குறிப்பில் அதில்வரும் இடப் பெயர்களை அடையாளம் காட்ட ஆசிரியர் முயன்றுள்ளார். பறம்புமலை (பா : 29) என்பது பரம்பிக்குளம் என்கிறார். ஆனால் பறம்புமலை கொங்கு நாட்டு கோபிக்கண்மையிலிலுள்ளது என்ற கருத்தும், இராமநாத புரம் மாவட்டத்திலுள்ள பிரான்மலை என்ற கருத்தும் உண்டு. கோயம்புத்தூர் கோசர்புத்தூரிலிருந்து வந்தது என்ற கருத்து முன்பு சொல்லி வந்தது. ஆனால் கோவன்புத்தூர் என்பதே அதன் பழைய கல்வெட்டுவடிவம். குறும்பொறை நாடன (பா. 43) (அகம் 4) என்பது முல்லைத் தலைவனின் பொதுப்பெயராகும். இதைக் குறிப்பிட்ட நாட்டின தலைவன் எனக் கொண்டு, கோழிக்கோட்டுக்கு வடக்குள்ள பிரதேசம் என இடம் சுட்டுவதுமுற்றிலும் பொருந்தாது.

இது போன்றே குண்டுகட்பாலி ஆதன் (பா 16)(நற் 220) என்ற புலவர் பெயரை குன்றின்கட்பாலி ஆதன் எனத் தவறாகக் கொடுத்துள்ளார். அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களும் பொருந்தாதவை. மாசாத்தியார் (பா. 58) (அகம் 384) பெயருக்கு

முன் வரும் ஒக்கூர் என்பது விடுபட்டுள்ளது. குறுவழுதி (பா. 84) அகம் 150) என்பவர் பெண்பாற் புலவர் என விளக்கம் கொடுத்திருப்பதும் தவறு. வழுதி என்பது பாண்டியர் குடும்பப் பெயர். மேலும் இவர் முழுப்பெயர் அண்டர் மகன் குறுவழுதியார் என்பதாகும். இதிலிருந்தே இவர் ஆண்பாற் புலவர் என்பது தெளிவல்லவா? பாட்டு 39 (நற் 271) இன் ஆசிரியர் பெயர் என ஆசிரியர் கொடுத்துள்ளார். பல பதிப்புக்களிலும் இது ஆசிரியர் பெயர் காணப்பாடலாக உள்ளது. ஆசிரியர் எந்தப் பதிப்பை பின்பற்றினார் எனத் தெரியவில்லை. பதிப்பு பற்றிய விபரம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை.
ஒவ்வொரு பாடலுக்கும் கள்ளன்றெ மோன்' செங்குட்டுவன்றெ குலம்' என்பது போலப் பாட்டின் முக்கிய செய்தியைத் தலைப்பாகக் கொடுத்துள்ளார் மொழி பெயர்ப்பாசிரியர் : அதோடு அப்பாட்டு முன்பு பத்திரிக்கையில் வெளியான நாள் மாதம் வருடம் ஆகியனவும் கொடுக்கப்பட்டுள்ளன

சங்க இலக்கியம் பல்வேறு தளங்களில் உணர்த்தும் உள்ளுறைப் பொருளை பாட்டின் கீழே உள்ள விளக்சத்தில் ஓரிடத்திலாவது எடுத்து விளக்கமால் ஆசிரியர் வீட்டிருப்பது இந்நூலிலுள்ள ஒரு குறையாகும்.

மலையாள வாசகர்க்குப் பழந்தமிழ் அகக் கவிதைகளைக் கவிதையில் பெயர்த்து ஆசிரியர் அறிமுகப்படுத்திய இம் முயற்சி மிகவும் பாராட்டற்பாலது. சில குறைகள் ஆங்காங்கே இருந்தாலும் ஆசிரியர் செய்த பணியோ பெரிது. அதை வரவேற்று, இது போன்று ஆசிரியர் புறம் கவிதைகளையும் மொழி பெயர்த்து மலையாள வாசகர்களுக்குத் தழ்மி இலக்கியத்தின் தொன்மையினையும், பெருமையினையும் நயம்பட உரைத்தல் வேண்டும.

— (0) —

ஏறு தழுவுதல் — பல வகை

— அசாமி

ஆண்டு தோறும் பொங்கல் விழா வருகிறது தைத்திங்களில் அறுவடை முடிந்ததும் கொண்டாடப்படுவதே பொங்கல விழாவாகும செந்நெல்லும், கரும்பும, வாழையும், இஞ்சியும் மஞ்சளும இந்த விழாவில் முக்கியமான இடம் பெறுகின்றன. பொங்கலின் முதல் நாள் மக்களுக்கும், மறுநாள் மாடுகளுக்குமாக இந்த விழா அமைக்கப்பட்டுளளது. வேளாண குடிமகனுக்கு மாடு தான் செல்வம். எனவே மாட்டுக்கும் மாலை அணிவித்து, பொட்டிட்டு, சோறு ஊட்டி மகிழ்கிறான்.

பொங்கல் நாளையொட்டி 'ஏறு தழுவதல்' என்ற வீர விளையாட்டும் நிகழ்த்தப் பெறுகிறது. தொழுவத்தில் அடைக்கப்பட்டுள்ள மாடுகளை அதற்கு மறுதினம அவிழ்த்து விட்டுவர். சீவி விடப்பட்டு எண்ணையும தேய்க்கப் பெற்று பளபள வென்றிருக்கும கூரிய கொமபுகளை அசைத்துக் கொண்டு மாடுகள் மிரண்டு ஓடும். சில இளைஞர்கள் அஞ்சாமல் அதன் முன்னால் பாய்ந்து சென்று திமிலைப் பிடித்து அமுக்கி காளையினைக் கட்டுப்படுததி ஓடவொண்ணாமல் நிறுததுவர் உடல் வலிமையும், உள்ளத் திண்மையும பொருந்திய அத்தகைய இளங்காளையர் பலராலும் பாராட்டப்படுவர். காளையரின் திறமையைச் சோதிப்பதற்கென்றே மாடுகளை வளர்த்து குறிப்பிட்ட நாட்களில் போட்டியினையும், பரிசுப் பொருளையும் அறிவித்து ஏறு தழுவச்செய்தலும் உண்டு "அஞ்சாத சிங்கம் என காளை பஞ்சாய்ப் பறக்கவிடும் ஆளை" —என்று நாட்டுப் பாடற்பகுதிகள் இக்கருத்தைத் தெளிவுறுத்தும். சீறிவரும் காளையை அஞ்சாமல எதிர் நின்று அடக்கும் அடலேறு போன்ற அத்தகைய இளைஞர்கட்குத் தான் பெண்ணை மணமுடித்து வைப்பது அந்நாளைய பழக்கம் தமிழிலக்கியத்தில் கொல்லேறு தழுவல் என்று பலபடப் பேசப்படுவதும் இதுதான். காலப்போக்கில் இந்த வீர விளையாட்டு மறைந்து வருகிறது.

ஏற்றினைத் தழுவி வீரத்தைக் காட்டும் தமிழகத்து விளையாட்டில் மனிதனுக்கு உயிர்போவதைத் தவிர மாட்டுக்கு ஒன்றும் நிகழ்வதில்லை. ஏறு தழுவுதல் என்னும் சொற்றொடரே இக்கருத்தைத் தெளிவு படுத்துகிறது. அருகி வரும் இந்த விளையாட்டு பொங்கல்

நாளையொட்டி மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், மேலூர், தஞ்சையில் செங்கிப்பட்டி, வல்லம், பூதலூர், திருச்சியில் துறையூர், அன்பில் போன்ற இடங்களில் இன்னமும் நடத்தப் பெறுகின்றது. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கென்றே அண்மைக் காலந்தொட்டு தமிழக அரசினரே இந்த விளையாட்டினை நடத்த ஏற்பாடு செய்கின்றனர். ஏறு தழுவுதல் எனும் இவ்வீர விளையாட்டு தமிழகத்துக்கு மட்டும் உரியது என்றே கூறலாம். இந்த விளையாட்டில் ஈடுபடும் கட்டிளங்காளை சற்றேனும் கவனக் குறைவாகவோ, சுறுசுறுப்பாகவோ இயங்காமல் கண்மூடித்தனமாக காளையோடு மோதும் போது குடல்கிழிந்து கோர மரணம் அடைவதும் உண்டு

தமிழகத்தில் நிகழ்த்தப்படுவதை விட பயங்கரமான முறையில் ஏருதுச் சண்டை (Bull-fighting) ஐரோப்பாவில், ரோம, ஸ்பெயின், போர்ச்சுகல் மற்றும் அமெரிக்காவில் மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் நடக்கிறது. இந்த எருதுச் சண்டை அந்நாடுகளில் வணிக ரீதியில் நடத்தப்படுகிறது. தமிழகத்தில் காணப்படுவது போலவே, அந்நாட்டு மக்களின் சமூக வாழ்க்கையோடு ஒன்றிய சம்பிரதாயமான விளையாட்டாகத்தான் தொடக்க காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏனெனில் இற்றை நாட்களிலும் கூட ஸ்பெயின் நாட்டுப் பெரிய நகரங்களிலே ஒவ்வொரு ஆண்டும் ஜூலைத் திங்கள் முதல் வாரததில் ஏறு தழுவல் விழாவும் நடக்கிறது. நிகழ்ச்சிக்கு ஓரிரு நாட்கள் முன்னதாகவே குறிப்பிட்ட தெருக்களின் வழியே காளை மாடுகள் அவிழ்த்து விரட்டப்படும் என்று அறிவித்து விடுவார்கள். அந்நாட்களில் பெண்டிரும, வயது முதிர்ந்தோரும், குழந்தைகளும் அந்தந்தத் தெருக்களில் ஆங்காங்கே வேடிக்கை பார்க்க ஒதுங்கி நின்று விடுவர். கும்பல் கும்பலாக எருதுகள் ஓடி வரும். இளைஞர்கள் அவற்றைப் பின் சென்று பற்றி அடக்க முயல்வர். மாடுகளைப் பற்றிக் கொண்டே ஓடுவோரும், கீழே விழுந்து மீண்டும் எழுந்து மாடுகளைத் துரத்துவோருமாக இளைஞர்கள் இதில் பங்கு கொள்வர். இவர்களைப் பார்த்து தெரு நெடுகிலும் மக்கள் ஆரவாரமாகக் கை தட்டுவதும், பாராட்டுவதும், கேலி செய்வதும் உண்டு.

இந்த பொது விளையாட்டேயன்றி சிறப்பு நிகழ்ச்சியாக மாட்டுக்கும் மனிதனுக்கும் சண்டை நடப்பதும் உண்டு இந்த நிகழ்ச்சியினைக் காண்பதற்கு வட்டமான பெரிய அரங்கத்தினைச் சுற்றிலும் ஏறு வரிசையில் நூற்றுக்கணக்கான மக்கள் அமர்ந்திருப்பர்

அனைவரும் இதற்கென்று கட்டணம் செலுத்தியவர்கள். குறித்த நேரத்தில், சண்டைக் கென்றே வளர்க்கப்பட்டிருக்கும் எருது அரங்கத்துக்குள் பிரத்தியேக வாயில் வழியாக உள்ளே விடப்படும். எருதுச் சண்டையில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் சிலர் அதனை விரட்டியும் குச்சியால் குத்தியும் ஆத்திர மூட்டுவர். மாடு கோபங் கொண்டு பாய்கின்ற நிலையில் இந்தப் பயிற்சியாளர்கள் வெளிவந்து விடுவர். அப்போதுதான் எருதுச் சண்டை வீரன் (Matador) அரங்கத்துக்குள் வருவான். மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வர். அவனுடைய நுழைவுக்குப் பின்னர் தான் மயிர்க் கூச்செறியும் சண்டை ஆரம்பமாகும்.

காலோடும், உடலோடும் ஒட்டிய உடை அணிந்திருக்கும் எருதுச் சண்டை வீரனின் ஒரு கையில் கூர்மையான ஈட்டி இருக்கும். மறு கையில் சற்றே நீண்ட சதுரமான சிவப்பு கெட்டியான படுதா மாதிரியான துணி இருக்கும். முன்னமேயே ஆத்திரமூட்டப்பட்ட எருது தன்னை எதிர்த்து நிற்கும் வீரனை நோக்கிப் பாய்ந்து வரும். கொம்பை முன்வைத்துப் பாயும்போது சிக்கினால் வீரன் கோர மரணம் அடைந்து விடுவான். ஒரு கட்டத்தில் எருதின் கால் குளம்புகள் கூட வீரனின் காலை மிதித்து விடுமோ என்று நினைக்கக் கூடிய அளவு நெருங்கி இருக்கும். மின் வெட்டும் நேரத்தில் எங்கும் ஓடாமல் ஒரு காலை ஊன்றி துணியால் மறைத்துக் கொண்டு அரைவட்டம் போடுவது போல் சுழன்று நின்று அவன் மாட்டின் நேரடித் தாக்குதலை ஒதுக்கி விடுவான். மாட்டின் நேரடித்தாக்குதலிருந்து தப்பித்துக்கொண்ட அந்தக்கணத்திலேயே கையிலிருக்கும் ஈட்டியால் மாட்டினைக் குத்திவிடுவான. தாக்குதலில் தோல்வியும் கண்டு, ரத்தம் கொட்டுகின்ற காயமும் பட்டு மாடு சுழன்று வந்து மீணடும கண் மூடித்தனமாகத் தாக்கும். பகுத்தறியும் வன்மையில்லாத எருதின் முரட்டுத்தனமான நேரடித் தாக்குதல், சுழன்று நின்று ஈட்டியால் குத்தும் மானுட சூழ்ச்சியை மீற முடியாத நிலைமை வெகுநேரம் நீடிப்பதில்லை மின்னல் வெட்டும் நேரத்தில் செயல்படுகின்ற விரைவும், கணிப்பும், சுறுசுறுப்பும், அஞ்சாமையும் இருக்கின்றவரை வீரன் பிழைத்துக் கொள்வதோடன்றி எருதினையும் சிறுகச் சிறுகக் கொன்று வீழ்த்திவிடுவான். படபடக்கும் நெஞ்சோடும, அச்சத்தோடும் மக்கள் கண்ணிமைக்காமல் இந்த சண்டையினைப் பார்த்துக் கொண்டிருப்பர். ரத்தம் ஆறாகப் பெருகி எருது வீழ்ந்து பட்டதும், வீரனுக்குப் பாராட்டும் பரிசும் குவியும்.

எர்னஸ்ட் ஹெமிங்வே என்னும் நோபெல் பரிசு பெற்ற அமெரிக்க நாவலாசிரியர் 'பிற்பகலில் மரணம்' (Death in the After noon) எனும் கட்டுரை நூலில் எருதுச் சண்டையைப் பற்றியே பேசுகிறார்! பயங்கரமான இந்த விளையாட்டில் நான் நிச்சயமாக வெற்றி பெற்று மீளுவேன் அல்லது சவ ஊர்வலத்தில் சோகமாக உடை அணிந்து துயரம் தோய்ந்த கோலத்தில் நீ வருகின்ற வண்ணம் நான் பிணமாக வருவேன்' என்ற தனது காதலியிடம் சூளுரைத்துச் செல்லுகின்ற வீர இளைஞனின் வரலாற்றை காலின்ஸ், லாப்பியர் எனும் இரண்டு எழுத்தாளர்களும் ஆங்கிலத்தில் (Or I'll Dress you in Mourning) எழுதி வெளியிட்டுள்ளனர்.

ஸ்பெயின், மெக்ஸிகோ போன்ற நாடுகளில் நடப்பது போலன்றி, போர்ச்சுகலில் வேறுவிதமான 'ஏறுதழுவல்' வழக்கத்தில் உள்ளது. இங்கும் மாடும், மனிதரும் சண்டையிடுகின்றனர். ஆயினும் மிகுந்த கவனத்தோடு மாட்டின் இரண்டு கொம்புகளையும் பஞ்சாலும், துணியாலும் சுற்றிக்கட்டி விடுவர். மாடு முட்டினால் கூடக் காயமேற்பட வழியில்லை. இந்த வீரவிளையாட்டில் வீரம் இருக்கிறதோ இல்லையோ என்றாலும், நிச்சயமாக ஆபத்து இல்லை. மிருகங்களை வதைக்கக் கூடாது என்னும் ஈரநெஞ்சமுடையோர் இந்த முறையினை விரும்பி வரவேற்பர்.

நமது நாட்டிலேயே போர்த்துகீசியர் ஆண்டு வந்த கோவா பகுதியில் அறுவடைக் காலம் முடிந்ததும் மாட்டுச் சண்டை நடக்கிறது. இங்கு மனிதர்களின் பங்கு வேடிக்கை பார்ப்பது தான். ஏழை பணக்காரர்என்ற வேறுபாடின்றி குறிப்பிட்ட மைதானத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கூடுவர். இதற்கென்ற வளர்க்கப்பட்ட இரண்டு காளைகளை மைதானத்துக்குக் கொண்டு வந்து ஒன்றோடொன்று மோத விடுவர். சிற்சில சமயங்களில் போரை விரும்பாமல் அமைதியை நாடுகின்ற காளை வெகுண்டு கூட்டத்திற்குள் புகுந்து தப்பி ஓடி விடுவதும் உண்டு மாட்டுச் சண்டை நடந்தால் வலிய கொம்புகளும் மண்டையின் நெற்றிப்பகுதிகளும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு 'படீர்' 'படீர்' என்ற சப்தம் எழும்பும். மாடுகளுக்கு வேதனையான இந்த நிகழ்ச்சியைக் கண்டு மக்கள் கூட்டம் ஆரவாரம்செய்யும் ஏதாவது ஒரு காளை சோர்வடைந்து புறமுதுகு இடுகின்ற வரை இந்த விரும்பத்தகாத மாட்டுச்சண்டை நீடிக்கும்.

உயிர்வதையும், கொலையும் தவிர்க்கப்படவேண்டும் என்று எண்ணுகின்ற அன்புள்ளங்கள் இந்த விளையாட்டுகளை விரும்புவதில்லை. ரோம் நகரில் பற்பல காலங்களில் ஆட்சிபுரிந்த கிறித்தவத் தலைமைப்பீடத்தினர் (Pope) இந்த விளையாட்டினைத் தடை செய்திருக்கின்றனர். கோழிச்சண்டை சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டதுபோன்று மாடும் மனிதனும் சண்டையிடும் ஏறுதழுவல் முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பது பொருத்தம் என்றே தோன்றுகிறது. அல்லது போர்ச்சுகல் முறையினையாவது பின்பற்றலாம்.

பெரியோர்

நமது நாட்டில் பெரியோர் அவ்வப்போது தோன்றியே வருகிறார்கள். ஆனால் நாடு மட்டும் போதிய அளவு இன்னும் சீர்திருந்தவில்லை. நாட்டிலே அடிப்படையான குறைபாடு ஒன்றிருக்கிறது. அஃதென்னை? அது பெரியோர் அறிவுறுத்தல்களை எடுத்து அவர் உருவங்கட்கு மட்டும் வழிபாடு செய்வது. பெரியோர் உருவ வழிபாட்டைப் பார்க்கினும், அவர்தம் அறிவுறுத்தலே வாழ்க்கையைச் சீர் செய்ய வல்லதென்பதை மக்கள் உணர்ந்து நடத்தல் வேண்டும். பெரியோர் உடலங்கள் மறைந்து போவதில்லை. அவரவர் தத்தம் போதனையாய் உடல் தாங்குகின்றனர். வள்ளுவர் திருக்குறளாய்த் திகழ்கிறார்; நம்மாழ்வார் திருவாய் மொழியாய் விளங்குகிறார்; மாணிக்கவாசகர் திருவாசகமாய்ப் பொலிகிறார். மற்றவர் அவரவர் பனுவலாக ஒளிர்கிறார். ஆதலின் பெரியோரின் போதனை வழி நின்று ஒழுகுவது அவரை வழிபடுவதாகும். அவ்வழிபாடு வாழ்க்கையைச் சீர் செய்வதாகும். வாழ்க்கைச் சீர்திருத்தம் சமூகச் சீர்திருத்தமாய், நாட்டுச் சீர்திருத்தமாகும்.

— திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பு.

பாரதியும் சித்தரும்

டாக்டர் மு. மாணிக்கம்,

எம். ஏ, ,பி எச். டி.,

தமிழ்ப் பேராசிரியர்,

பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி,

பழனி.

தமிழகத்தில் பதினெண் சித்தர்கள் இருந்ததாகப் பலரும் கூறிவருகிறார்கள். இப்பதினெண் சித்தர்களும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவராகவே தெரிய வருகிறது. சங்க காலத்தில் சித்தர்கள் இருந்தது பற்றிய குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. பதினெண் சித்தர்கள் பற்றிய கதைகளும் அவர்கள் பாடிய பாடல்களும் சங்க காலத்திற்குப் பிற்பட்டனவாகவே உள்ளன. சித்தர் தத்துவம் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்த ஒரு புதிய தத்துவமே-யாகும்.

சித்தர்கள் பற்றிப் பொதுவாக நிலவுகின்ற கருத்து:

சித்தர்கள் கூடுவிட்டுக் கூடு பாயும் ஆற்றலுடையவர்கள், வானில் பறந்து செல்லும் திறம்படைத்தவர்கள், விலை மலிவான உலோகங்களை விலையுயர்ந்த உலோகங்களாக மாற்றும் வித்தை கற்றவர்கள். காயகல்பம் தின்று மரணத்தை வென்று என்றும் இறப்-பின்றி வாழ்பவர்கள், உருவ வழிபாட்டில் நம்பிக்கையின்றி எப்பொருளையும் இறைவனாக உணர்ந்து வாழும் பெருமக்கள், தம் உருவத்தைக் கரந்து அருவமாகவும் இயங்கும் இயல்புடையார் என்றெல்லாம் கூறப்படுகிறது. அட்டமா சித்திகளில் வல்லவர்கள் என்றும் கருதப்படுகிறது.

'சித்' என்றால் அறிவு. எதையும் அறிவு பூர்வமாகப் பார்த்துச் செயல்பட வல்லார் சித்தர் என்றும் கூறலாம். சித்தர்களில் மருத்துவர்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவர்கள் பயன்படுத்திய மருத்துவமுறை சித்த மருத்துவம் எனப்படும். இது பச்சிலைகளையும் மூலிகைகளையும் பயன்படுத்தி உடல் நோயைக் குணப்படுத்தும்

மருத்துவம் ஆகும். சித்த வைத்தியம் தமிழர்களுக்கேயுரிய, தனித் தன்மை வாய்ந்த, ஒப்பற்ற மருத்துவமுறையாகும்

உடல் நோயைக் குணப்படுத்த மருந்துவ முறை கண்டதோடன்றி சித்தர்கள் மனநோயைக் குணப்படுத்தவும் வழி கண்டுள்ளனர் என்பது அவர்தம் பாடல்களில் தெளிவாகிறது. இவர்கள் எதையும் அறிவுக் கண்கொண்டு பார்க்கும் பகுத்தறிவுவாதிகள். இங்கே பகுத்தறிவு என்று கூறுவது, நம்பிக்கை அடிப்படையில் எதனையும் ஏற்றுக்கொள்ளாமல் ஒவ்வொன்றையும் அதன் இயல்பினை நன்கு பகுத்துப் பகுத்து ஆய்ந்து ஏற்றுக் கொள்ளும் அறிவு என்ற அளவில்தான் கூறப்படுகிறது. அவர்கள் இறை நம்பிக்கையும் உடையவர்கள்.

சித்தர்கள் எத்தனை பேர்?

சித்தர்கள் பதினெண்மர் என்ற வழக்குத்தான் நெடுநாட்களாக நிலவி வருகிறது. இது முடிந்த முடிபாக ஏற்றுக்கொள்ள முடியுமா? பதினெண் சித்தர்கள் யார் யார் என்று பெயர்ப்பட்டியலும் தரப்படுகிறது. அந்தப் பதினெண் சித்தர்களுக்குப் பிறகு தமிழகத்தில் வேறு சித்தர்களே தோன்றவில்லையா? சித்தர்களுக்குரிய முக்கிய இயல்புடன் பிற்காலத்தில் வாழ்ந்தவர்களைச் சித்தர்கள் என்று சொல்வதில் என்ன தவறு? சித்தர்களின் இயல்புகொண்டோர் பிற நாடுகளில் வாழ்ந்தால் அவர்களைச் சித்தர்கள் என்று கூறுவதில் பிழையேதும் உண்டோ? இக்கேள்விகள் நம் சிந்தனைக்குரியவை.

பாரதியார் ஒரு சித்தரே

பாரதியார் சென்ற நூற்றாண்டில் இறுதியிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். பெருங் கவிஞராகத் திகழ்ந்த பாரதியார் தேசிய வாதியாகத் திகழ்ந்ததோடு சமயதத்துவங்கள் பலவற்றையுந் கற்றுணர்ந்த அறிஞராகவும் வாழ்ந்தார். அஞ்சா நெஞ்சுடல் வாழ்ந்த பாரதியார் ஒரு சித்தருக்குரிய குணங்களெல்லாம் கொண்டிருந்ததால் அவர் தன்னை ஒரு சித்தராகவே கூறிக் கொள்வதை அவர்தம் சுயசரிதையின் 2-ஆம் பகுதியான 'பாரதி அறுபத்தாறு' என்னும் நூலில் காணலாம்,

''எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தா ரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன இந்த நாட்டில்''

(பாரதி—அறுபத்தாறு, பாடல், 1)

இவ்வாறு தன்னையும் ஒரு சித்தனாகக் கூறிக் கொண்டதோடு 'முன்னோர்கள் உரைத்தபல சித்தரெல்லாம் முடிந்திட்டார், மடிந்திட்டார், மண்ணாய் விட்டார்' என்றும் கூறுகிறார் இவ்வாறு கூறிய பின்னர் மறைந்து விட்ட சித்தர்கள் யார் என்று அறிய விரும்பும் நமக்கு அறிவுறுத்துவார் போல புத்தன், சங்கராசார்யன், இராமானுஜன், யேசு, கண்ணன், இராமன் என்னும் இவர்களெல்லாம் மாண்டார்கள் என்றும் ''பார்மீது நான் சாகாதிருப்பேன் காண்பீர்'' என்றும் கூறுகிறார். மேற்கூறிய அறுவரையும் பாரதி சித்தர்களாகவே கருதியிருக்கிறான் என்று கொள்ளவேண்டியுள்ளது. செயற்கரிய செயல் செய்வார் அனைவரையுமே சித்தர் என்று கருதலாம் என்பது பாரதி கருத்துப் போலும்.

மரணத்தை வெல்லும் வழி:

மரணத்தை வெல்லும் வழி அறிந்தவர் சித்தர் "அத்வைத நிலை கண்டால் மரண முன்டோ?'' எனக் கேட்கும் பாரதி, மரணத்தை வெல்லும் வழியைக் கூறுகிறார். ' நாணம் கவலை, சினம், பொய், அச்சம், வேட்கை இவைகளை அழித்துவிட்டால் சாவு என்பதும் அழிந்து போகும்'' என்கிறார்.

,,நலிவுமில்லை, சாவுமில்லை! கேளீர், கேளீர்!
நாணத்தைக் கவலையினைச் சினத்தைப் பொய்யை
... ...
அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்;
மிச்சத்தைப் பின்சொல்வேன் சினத்தை முன்னே
வென்றிடுவீர், மேதினியில் மரண மில்லை'',

(பாரதி - அறுபத்தாறு, பாடல்கள் 6 7)

பாரதியார் இங்கே கூறியிருப்பதெல்லாம் மரணத்திற்கும் ஒரு வகையில் காரணமாய் மனநோய்களைக் தீர்க்கும் மருந்துகளாகும். உடல் நோயைப் போக்குவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மனநோயைப் போக்குவதும் என்று கூறலாம்.

உடல் நோய், மனநோய் இரண்டுக்கும் மருந்து கண்டு கூறியவர் தான் சித்தர்கள். ,,நாடியிலே அதிர்ச்சியினால் மரணம்'' என்றான் என்பதை ஜகதீச சந்த்ரவஸு கூறி நாடிச் சிதைவால் வருங்கேட்டை யெல்லாம் தெளிவாக அறிவியல் முறையில் விளககுகிறார்.

கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி யுண்டாம்
கொடுங்கோபம் பேரதிர்ச்சி; சிறிய கோபம்
ஆபத்தாம், அதிர்ச்சியிலே சிறியதாகும்;
அச்சத்தால் நாடியெல்லாம் அவிந்து போகும்;

தாபத்தால் நாடியெல்லாம் சிதைந்து போகும்;
கவலையினால் நாடியெலாம் தழலாய் வேகும்;
கோபத்தை வென்றிடலே பிறவற்றைத்தான்
கொல்வதற்கு வழியெனநான் குறித்திட டேனே''

(பாரதி - - அறுபத்தாறு, பாடல் 15)

புவியின்மிசை உயிர்களெல்லாம் அநியாய மரணம் எய்தல் கொடுமை என்று கருதி செத்திடுதற்குக் காரணத்தை ஆய்ந்து கூறியிருப்பது பாரதி ஒரு சித்தர் என்பதைக் காட்டுகிறது.

பாரதிச் சித்தரின் கடவுட் கொள்கை :

ஹரி என்ற கடவுள் எங்கே என்று உறிரணியன் கேட்க பிரகலாதன் 'தூணிலுள்ளான் நாராயணன் துரும்பிலுளளான்' என்று அவன்மகன் பிரகலாதன் கூறிய கதையைக் குறிப்பிட்டு கடவுளி ல்லாத அணுவொன்றில்லை, மகாசக்தியில்லாத வஸ்துவில்லை என்று பாரதி கூறுகிறார் கழுதை, தேள் இவற்றின் தாளைப் பார்த்து இருகரமும் சிரமேற் கொணடு சங்கர சங்கர என்று பணிதல் வேண்டும் என்றும், களத்தினையும் மலத்தினையும் வணங்கல் வேணடும் என்றும், கூடி நின்ற பொருளனைத்தின் கூட்டம் தெய்வம் என்றும தெளிவாகச் சொல்லி 'விண்மட்டும் கடவுளன்று மண்ணும் அஃதே' என்றும் கூறிகிறார். சுத்த அறிவே சிவம்என்று மேலோர்உரைத்தனர். சுத்த மண்ணும் சிவமென்று உரைக்கும் வேதம். வித்தகனாம் குரு சிவன் என்று மேலோர் உரைத்தார். வித்தையிலாப் புலையனும் அஃதே யென்னும் வேதம். அனைத்துயிரும் கடவுளன்று பேசுவது

மெய்யானால் பெண்டிரும் குழந்தையும் தெய்வமன்றோ என்று கேட்கிறார். உயிர்களெல்லாம் தெய்வம் அன்றி வேறில்லை. உயிர் வகை மட்டுமின்றி நாம் பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம். மேலும்

''வெயிலளிக்கும் இரவி, மதி, விண்மீன், மேகம்
மேலுமிங்குப் பலப்பலவாம் தோற்றங் கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்;
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம்''

(பாரதி - - அறுபத்தாறு பாடல், 18)

என்று உயிர்பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் சூரியன், சந்திரன், விண்மீன், மேகம் என்ற எல்லாமே தெய்வம் என்கிறார் பாரதியார்.

பாரதியுடன் பழகிய சித்தர்கள்:

பாரதியார் வாழ்ந்த காலத்தில் குள்ளச்சாமி அல்லது மாங் கொட்டைச்சாமி, கோவிந்த ஞானி, யாழ்ப்பணத்து சுவாமிகள், குவளைக் கண்ணன் என்போர் சித்தர்களாகத் திகழ்ந்தனர். அவர் களுடன் பாரதியார் தொடர்பு கொண்டதால் அவர்தம் உபதேச உரைகளாகும் வாழ்க்கை முறைகளாலும் பாரதி சித்தர் நிலை யெய்தினார் எனில்மிகையாகாது.

குள்ளச்சாமி உபதேசம்:

குள்ளச்சாமி தனக்குத் ''தேனனைய பராசக்தி திறத்தைக் காட்டிச் சித்தினியல் காட்டிமனத் தெளிவு தந்தான'' என்று பாரதி கூறியுள்ளார். வானகத்தை இவ்வுலகிலிருந்து தீண்டும் வகையுணர்த் திக் காத்த பிரான் குள்ளச்சாமி என்கிறார். எனவே சித்தினியல் கூறி பாரதியைச் சித்தராக்கியவர் குள்ளச்சாமி என்று கூறலாம். தனக்குத் தப்பாத சாந்தநிலை அளித்து மரணம் என்ற குளிர் நீக்கிக் காத்தான் குள்ளச்சாமி என்கிறார். பாசத்தை அறுத்துவிட்ட

குள்ளச்சாமி தனக்கு வரும் நாசத்தை அழித்து விட்டான்; யமனைக் கொன்றான். அவன் புகழை ஆயிர நூலில் எழுதினும் முடிவுறாது. காயகற்பஞ் செய்துவிட்ட அவன் வாழ் நாளைக் கணக்கிட்டு வயதுரைப்பார் யாரும் இல்லை.

புதுவையில் பாரதியார் இருந்தபோது ஒருநாள் குள்ளச்சாமி, பாரதியார் இராஜாராமையர் வீட்டில் இருந்தபோது அங்கு வந்தார். அவர் பெருமை உணர்ந்த பாரதியார் தமக்குள்ள சில ஐயங்களுக்கு அவரிடம் விளக்கம் கேட்டார். உடனே விடையளிக்காமல் குள்ளச்சாமி வெளியே ஓடினார். பாரதியும் பின்தொடர்ந்து பக்கத்து வீட்டுக் கொல்லையில் அவரைப் பிடித்தார். அப்போதுகுள்ளச்சாமி அங்கிருந்த குட்டிச் சுவர் காட்டி மேலே தோன்றும் சூரியனைக் காட்டி கிணற்றுள் விழுந்த சூரியனின் நிழல் காட்டி'' அறிதிகொலோ'' என்று கேட்டார். பாரதியும் அறிந்தேன்'' என்றார். குள்ளச்சாமி சைகையில் காட்டிய திலிருந்து பாரதி அறிந்தது யாது? அவரே கூறுவது:

''வாசியைநீ கும்பகத்தால் வலியக் கட்டி
மண்போலே சுவர்போலே வாழ்தல் வேண்டும்;
தேசுடைய பரிதியுருக் கிணற்றி னுள்ளே
தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்;
பேசுவதில் பயனில்லை, அனுபவத்தால்
பேரின்பம் எய்துவதே ஞானம்'' என்றார்.

பாரதி - - அறுபத்தாறு, பாடல் 28)

இப்பாடலில் சித்தர் கொண்டுள்ள சித்தம் (ஞானம்) எது என்று விளக்கப்படுகிறது மண்போல, சுவர்போல எவ்வகை யுணர்வுமற்றுச் சிவனை (இறைவனை)த் தம் உள்ளத்துள்ளே கண்டு பேச்சேதும் பயன்தராது என்றுணர்ந்து அனுபவத்தால் பேரின்பம் (வீடுபேறு) எய்துவதே ஞானம் என்று சித்தர் ஞானம் என்று எதைக் கருது-கின்றார் எனபது தெரிகிறது.

பின்னொருநாள் குள்ளச்சாமி தன் முதுகில் கந்தைத்துணி மூட்டை ஒன்றைச் சுமந்துகொண்டு பாரதியார் முன்னே வந்தார். அதைப் பார்த்து ''தம்பிரானே! தங்கள் செய்வது பித்தருடைச் செய்கையன்றோ? இப்படி அழுக்கு மூட்டை சுமப்பதென்ன?''

என்று கேட்க, ''புறத்தேநான் சுமக்கின்றேன்; அகத்தினுள்ளே இன்னதொரு பழங்குப்பை சுமக்கிறாய் நீ'' என்று கூறிவிட்டுக் குள்ளச்சாமி விரைவாக மறைந்தார். உள்ளத்தில் பழங்குப்பை என்று குள்ளச்சாமி உரைத்தது நம் மனத்துள்ளே உள்ள பழம்பொய்கள் தான் என்று பாரதி கூறுகிறார். மனத்தில் உள்ள கவலையால் தான் மனிதர் சாகிறார். கவலையை விட்டு ''இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்''.

சித்தரென்பார் யார் என்று குள்ளச்சாமியிடமிருந்து தாம் உணர்ந்ததைப் பாரதி கீழ் வருமாறு கூறுகிறார்:

''...... ஸ்ரீதரன்யான் சிவகுமா ரன்யா னன்றோ
நன்றிந்தக் கணம்புதிதாய்ப் பிறந்து விட்டேன்;
நான்புதியன்; நான் கடவுள்; நலிவிலாதோன்;
என்றிந்த வுலகின்மிசை வானோர் போலே

இயன்றிடுவார் சித்தரென்பார்; பரம தர்மக்
குன்றின்மிசை யொருபாய்ச்ச லாகப் பாய்ந்து
குறிப்பற்றார் கேடற்றார் குலைத லற்றார்''

(பாரதி — அறுபத்தாறு பாடல், 34)

கோவிந்த ஞானி:

குள்ளச்சாமியைப் போல பாரதியின் வாழ்வில் பெருமாற்றம் ஏற்படக் காரணமாக அமைந்தவரில் கோவிந்த ஞானி என்பவரும் ஒருவர். அவர் அன்பினால் முக்தி என்ற புத்தனைப் போல அன்பே உருவானவர். அவர் அன்பே தெய்வம் என்றார். மன்னுயிர்கள் அனைத்துமே தெய்வம் என்ற அறிவுடையார். கவலை யெனும் மயக்கம் தீர்ந்தவர். ஒருநாள் அவர் பாரதி முன்தோன்றி பாரதியின் இறந்த தந்தை உருவைக் காட்டினார். பின்னொருநாள் தாயுருவைக் காட்டினார். இவ்வாறு பாரதி மனங்கொளத் தந்தையாகவும் தாயாகவும் காட்சி கொடுத்தார். அவர் யோகி; பரம ஞானத்தனுபூதி உடையவர். அவரைக் குருவெனப் பாரதி சரணடைந்தார்; மரண பயம் நீங்கி வலிமை பெற்றார்.

யாழ்ப்பாணத்து சுவாமிகள் :

இவர் யாழ்ப்பணத்தைச் சேர்ந்தவர்; தேவிபதம் மறவாதவர் தீர ஞானி. சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாகவே திகழ்ந்தார் பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணியாகவே அவர் விளங்கினார். தன்னிரு விழியால் அருளைப் பொழியும் யாழ்ப்பணத் தீசனையே சங்கரனென்று எப்போதும் சரணடைந்தால் அதுவே சர்வ சித்தி என்கிறார் பாரதி.

குவளைக் கண்ணன் :

இவர் குவளையூர்க் கண்ணன் என்றும் அழைக்கப்படுகிறார். இவரே யாழ்ப்பாணத்து சுவாமிகளைப் பாரதியின் இல்லத்துககு அழைத்துச் சென்றவர். இவர் பார்ப்பன குலத்தில் பிறந்தாலும 'பறையரையும் மறவரையும் நிகராக் கொண்டான்'. சிவனடியார் பலர் இவர் மீது கருணை கொண்டார். மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர். வானவரெல்லாம் கண்ணன் அடியாராவார். துணிவுடைய நெஞ்சினர். இவர் யாழ்ப்பாணத்து சுவாமிகளைப் பாரதியின் இல்லத்திற்கு அழைத்து வந்தபோது பாரதி தம் அகத்தில் அவர் திருப்பாதமலரைப் பூண்டார். அப்போதே வீடுபேறுற்றவரானார்.

காதலின் புகழ் :

பாரதியார் இவ்வுலகம் மாயை என்று கூறவில்லை. இவ்வுலகில் உள்ள பொருள்கள் அனைத்தும், உயிர்கள் அனைத்தும் கடவுள் என்று கொண்டதால் தாயையும் மனைவியையும் கூட போலித்துறவிகள் போல வெறுத்தொதுக்காமல் தெய்வமாகவே போற்றுகிறார். பாட்டினிலே காதலைப் பாடப் பரமசிவன் பாதமலர் பணிகின்றார் பாரதியார். சிவன் பார்வதியைத் தன் இடப்பாகத்தே வைத்தான் நான்முகன் கலைமகளைத் தன் நாவில் வைத்தான். திருமாலும் திருமகளைத் தன் மார்பில் வைத்தான். எனவே வானோர்க்கேனும் மாதரின்பம் போல் பிறிதோர் இன்பம் உண்டோ? காதல் செய்யும் மனைவியே சக்தி. கடவுள்நிலை அவளாலே எய்தல் வேண்டும் 'காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்; கவலை போம்; அதனாலே மரணம் பொய்யாம்' என்று பாரதி காதலின் புகழ் பாடுகிறார்.

மாதரின்பததைச் சிற்றின்பம் என்பதை பாரதி ஏற்கவில்லை. ''அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம'' என்கிறார்.

அதுவே நீ:

கோவிந்த ஞானி பின்னொரு நாள் பாரதியார் இல்லம் போந்தார். அப்போது அவரிடத்தில் பாரதியார் சில ஐயங்களைக் கூறித் தெரிவிக்க வேண்டினரர். அதற்கு கோவிந்த சுவாமிகள் ''அதுவே நீ யென்பது வேத வேதாந்தம். அதுவென்றால் எது? அதுவென்றால் முன்னிற்கும் பொருளின் நாமம். அவனியிலே பொருளெல்லாம் அதுவாம். நீயும் அதுவன்றிப் பிறிதில்லை. அதனால் உலகில் எதுவரினும் அசைவுறாமல் இராமன் தாளை மனத்தில் நிறுத்தியிங்கு வாழ்க'', என்று எல்லாம் இறைவன் திருவுருவே என்பதை இவ்வாறு விளக்கினார். மேலும் சமய ஒருமைப் பாட்டையும் அவர் உபதேசித்தார். 'ஓம்நமச்சிவாய' என்றும், 'உறரிஉறரி' என்றும், 'சிவசிவ' என்றும், 'ஓம் சக்தி' என்றும் கூறுவது அப்பொருளின் (இறை) பெயரேயாம். ஏஉேறாவா, அல்லா நாமத்தைப் பேசாற்றல் வேண்டும். பூமியில் ஐந்து கண்டங்கள் என்றால் மதங்கள் கோடி. புத்தமதம், சமண மதம், பார்ஸிமார்க்கம், யேசுமார்க்கம், உறிந்து மதம், இஸ்லாம், யூதம், சீனத்துத் 'தாவு' (Tao-Tse) மார்க்கம், 'கண்பூசி' மதம் (confucius) முதலாக நாம் அறிந்த மதங்கள் பல உண்டு. இவை யாவற்றிலும் உட்பொதிந்த கருத்திங்கொன்றே. எல்லாச் சமயங்களும் உணர்த்தும் ஒரு பொருள்:

''சாமிநீ; சாமிநீ; கடவுள் நீயே;
தத்வமஸி; தத்வமஸி; நீயே அஃதாம்;
பூமியிலே நீ கடவு ளில்லை யென்று
புகல்வது நின் மனத்துள்ளே புகுந்த மாயை;
சாமிநீ அம்மாயை தன்னை நீக்கிச்
சதாகாலம் 'சிவோஉற' மென்று சாதிப்பாயே''

என்று முடிக்கிறார்.

முடிவுரை :

பாரதியார் ஒரு பெருங்கவிஞர், தேசிய வாதி என்றெல்லாம் அறிந்துள்ள நமக்கு அவரை ஒரு சித்தராகப் பார்ப்பது புதுமை-யாகப் படலாம். ஒரு சில சித்தர்களைப் போலக் கடினமான

முறையில் பாரதியார் தம் கருத்துக்களைக் கூறவில்லை. எளிய நடையில் அரிய தத்துவத்தை விளக்கியுள்ளார். அட்டமா சித்திகளில் வல்லவர்தான் சித்தர் என்ற கருத்தைப் பாரதி ஏற்கவிலலை. எனவே சித்துகள் ஏதும் செய்யாததாலே பாரதியைச் சித்தர் அல்லர் என்று கூறமுடியாது. சமகாலப் புலவர்களிலேயிருந்து பெரிதும் வேறுபட்டவர் பாரதியார் என்பது வெளிப்படை. 'நானும் ஒரு சித்தன்' என்று பாரதி சொன்னதை நாம் ஏற்றுக் கொண்டு அவர் கூறும் தத்துவத்தை இக்கட்டுரையில் பார்த்தோம். பாரதியரர் கூறும் தத்துவம் சித்தர் தத்துவத்திற்குப் புது விளக்கம் என்று கொள்ளலாம்.

சிந்தனைக்கு

(i) உலகினில் துன்பம் நீங்க உண்டனை நஞ்சை, அன்பே
சிலுவையில் நின்று செந்நீர் சிந்தினை, அரசை நீத்து
விலகினை, மாடு மேய்க்க விரும்பினை, அடியும் தாங்கி
இலகினை, சமரசத்தை எண்ணினால் துயரம் போமே.

(ii) புல்லாங் குழலின் இசை முழக்கி போதி நிழலில் தவங்கிடந்து
கல்லா லடியிற் பேசாது கல்லாம் மலையில் மறைபேசி
எல்லாருங் கொள் சமரச சன் மார்க்க மிசைத்தே உரிமையளி
செல்வா சிறியர் பிழைபொறுக்குந்தேவா வாழி!
அருள் வாழி!

— பொதுமை வேட்டல்

அறிவியல் வினா விடை

திரையன்

(i) புற்று நோய் வருதற்குரிய காரணங்கள் யாவை? அந்நோயினை அறவே போக்கிவிட முடியுமா?

பெரியம்மை, பிளேக் போன்ற கொடிய நோய்கள் இந்தியா உள்ளிட்ட பற்பலநாடுகளில் நிரந்தரமாகவே போக்கப்பட்டு விட்டன. புற்று நோயின் கொடுமையிலிருந்தும் மனிதகுலம் காப்பாற்றப்பட வேண்டும் என்னும் உலகளாவிய பணியில் ஈடுபட்டிருக்கின்ற புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் பிரான்சு நாட்டில் லியான்சு நகரத்தில் உள்ளது, 1965 - ஆம் ஆண்டில் தோற்று விக்கப்பட்டது இந்நிலையம். இதற்கு வேண்டிய பொருளுதவியை பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து.அமெரிக்கா போன்ற நாடுகள் அளிக்கின்றன. டாக்டர் தோமாட்டிஸ் என்பார் அதன் தலைவர். தொடர்ந்து புகை பிடித்தலும் சுற்றுப்புறச் சூழ்நிலை கெட்டுப்போன இடங்களில் வாழ்தலும் புற்று நோய் வருதற்குரிய காரணங்களாகும் என்று அவர் கூறுகிறார். ஈரல், தொண்டை, குரல்வளை போன்ற பகுதியில் இந்நோய் வருவதற்கு புகைபிடித்தலே ஏதுவாக அமைகிறது ஒருவித நன்மையும் இல்லை யென்று தெரிந்தும் தீமையை விளைவிக்க்கூடிய இக்கொடிய பழக்கத்தை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிற மனிதர் களைப் பற்றி இந்த டாக்டர் பரிதாபப்படுகிறார். பரம்பரையாக இந்த நோய் வருவதில்லை. முப்பது வயதுக்கு உட்பட்ட பெண் களிடையே தான் மார்பகத்தில் புற்றுநோய் ஏற்படுகிறது. இக்கொடிய நோயினை முற்றுமாக அழித்து விடமுடியும் என்று தோன்றவில்லை. ஏனெனில் அந்த நோய்க்குரிய ஆதாரங்களையும் இது காலும் அறுதி யிட்டுக் கூறமுடியவில்லை. செய்யவிருக்கின்ற ஆய்வினையும் அதன் முடிவுகளையும் வைத்தே இதனை ஒழிக்க முடியுமா என்று கூறலாம் பெரிதும் பரவலாக இந்நோய் வயது முதிர்ந்தோரிடையே வருவதால் இதனைப்பற்றி அதிகம் கவலைப்படவேண்டியதில்லை என்பது ஒரு சிலரின் கருத்து. தண்டூன்றி நடக்கும் கிழட்டுப் பருவம் ஆனாலும் கடைசி மூச்சு இருக்கின்ற வரை அவர்கட்கு நிம்மதியான வாழ்வு கொடுப்பது நமது கடமை. அதற்கேற்ற சூழ்நிலையும், வசதியும், நோயற்ற வாழ்வும் அளிப்பதற்கு ஆய்வுப்பணிகள் தொடந்து நடக்க வேண்டும்.

(ii) பூனைகள் பொருள்களை இரவில் பார்க்க முடியுமா? எப்படி?

அறை முழுவதும் கொஞ்சம் கூட வெளிச்சமின்றி இருட்டாக இருந்தால், பூனை எந்தப் பொருளையும் பார்க்க முடியாது. மிகவும் குறைந்த மங்கலான ஒளியிருந்தாலும், பூனைக்குப் போதுமானது. பூனை மட்டுமன்றி இரவில் உலவும் மிருகங்கள் அனைத்துக்கும் கண்களில் சவ்வு போன்ற ஒரு பகுதி உள்ளது. தன் மீது படும் சிறிய ஒளியினையும் பெரிதாக்கும் இந்த உறுப்பே பூனை போன்ற பிராணிகளுக்குத் தெளிவாகப்பார்க்கும் சக்தியைக் கொடுக்கிறது. பூனையின் கண்களுக்கு நேரே இரவில் ஒளியைச் செலுத்தினால் அவற்றின் கண்கள் பிரகாசிப்பது தெரியும். கண்களில் இருக்கும் சவ்வு போன்ற உறுப்பே இதற்குக் காரணமாகும்.

(iii) அழுகிய முட்டைகள் ஏன் மிதக்கின்றன?

முட்டைகள் கெடாமல் இருக்கும்போது நீரைவிடை கனமாக இருக்கும், எனவே அவை நீரில் அமிழ்ந்து விடும். கெட்டுப்போன முட்டையில் வெள்ளைக்கருவும், மஞ்சட்கருவும் கலங்கி ஒன்றோடொன்று இணைந்து திரவமாகி விடுகின்றன. குட்டையில் தேங்கிக் கிடக்கும் நீரில் வாயு உருவாகி நாற்றம் எடுப்பது போல், முட்டைக்குள்ளிருக்கும் திரவத்தில் கந்தகவாயு உற்பத்தி ஆகிறது. இதுவே அழுகிய முட்டை உடைந்தால் நாறுவதற்குக் காரணம் ஆகின்றது. முட்டைக்குள்ளிருக்கும் வாயு ஓட்டின்மீதுள்ள மிக மெல்லிய துளைகளின் வழியாக வெளியேறிக் கொண்டிருக்கும். அப்போது முட்டையின் கனம் குறைகின்றது. கனம் குறையும்போது முட்டை இலேசாக இருக்கிறது. தண்ணீரிலும் மிதக்கிறது.

(iv) தலைமுடி நரைப்பதற்குரிய காரணங்கள் யாவை?

முடி நரைத்தலுக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. மருத்துவர்கள் நரை விழுதல் பாரம்பரியமாக வருவதாகும் என்பர். கவலையின்றி இருந்தால் பெரும்பாலும் நரை விழாது. 'யாண்டு பலவாக' என்றுதொடங்கும் புறநானூற்றுப் பாடலே இதற்குச்சான்று. பி - வைட்டமின் குறைவினாலும் நரை விழலாம் என்று பலர் கருதுகின்றனர்.

(v) குடற்புண்கள் எவ்வாறு ஏற்படுகின்றன? அவற்றை எளிதாக குணப்படுத்தும் வழிமுறைகள் யாவை?

வயிறு, குடல், உணவுக்குழல் போன்றவற்றின் உட்புறச் சுவர்களில் எங்காவது ஓரிடத்தில் உடம்பிலேயே ஊறும் அமிலங்கள் அதிகப்படியாக நிலைப்பட்டுப்போய் புண் (ulcert) ஏற்பட்டு விடும். எரிவது போன்ற உணர்வும், தாங்க முடியாத வலியும் விட்டு விட்டுத் தோன்றும். இரவு பகலாகக் கண்விழித்து வேலை செய்தாலும், பசிவந்ததும் குறித்த வேளைகளில் உண்ணாமல், நினைத்த நேரத்தில் கிடைத்ததைச் சாப்பிட்டாலும், குடற்புண் வாய்ப்பு உண்டு. மனக்கவலையும், அச்சமும், பரபரப்பும் ஏற்படும்போது உடலில் அமிலங்கள் சற்று அதிகமாக உற்பத்தியாகி விடும். இதுவும் குடற்-புண்ணுக்கு ஒரு காரணமாகும். தொடக்க நிலையிலேயே கவனித்து விட்டால், காரம், புளிப்பு கலந்த உணவைத் தவிர்த்து, பால், பழம், மற்றும் ஆவியில் வேகவைத்த பண்டங்களை உண்டு நோயின் கடுமையினைக் குறைத்து விடலாம். குடற்புண் உள்ளவர்கள் மது, டீ, காபி, பீடி, சிகரெட் போன்றவைகளைத் தொடக்கூடாது. ஆஸ்பிரின், அனாசின் மாத்திரைகளைத் தவிர்க்க வேண்டும். வெறும் வயிற்றில் அம்மாத்திரையை சாப்பிடவே கூடாது. வெற்றிலை, பாக்கு புகையிலை போடக்கூடாது. எந்தவிதக் கவலையும் இன்றி, எதனைப் பற்றியும் அலட்டிக் கொள்ளாமல், நிதானமாகத் தனது பணிகளைச் செய்ய வேண்டும்.

புண்ணினால் வலி ஏற்படும்போது, பால், குளுகோஸ் நீர், பிஸ்கட், கனிந்த பழங்கள் போன்றவற்றை விட்டு விட்டுச் சாப்பிட வேண்டும். உணவு உட்கொண்ட ஒரு மணி நேரம் கழித்தே குடற் புண்ணைக் குணப்படுத்தும் (antacid) மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். கடுமையான புண் நோய் கண்டவர்களுக்கு (cimetidine) எனும் மருந்து கொடுக்கலாம். மருந்துகளினால் கட்டுப்படுத்தமுடியாத அளவுக்குப் புண் கடுமையாகும்போது புண்களிலிருந்து வரும் இரத்தமே வாந்தியாக வரும். அந்நிலையில் மலமும் கறுப்பு நிற-மாகி விடும். அப்போதுதான் மருந்து கொடுப்பதை நிறுத்தி விட்டு புண்பட்டுப்போன இடத்தை வெட்டியெறிந்து அறுவைச் சிகிச்சை (surgery) மூலம் குணப்படுத்த முயற்சி செய்வர்.

(vi) கோழியினத்தில் மிகப்பெரியதாகக் கருதப்படும் பறவை எது?

நெருப்புக் கோழியே பறவைகளில் மிகப் பெரியதாகும். சிங்கம், புலி, ஓநாய் போன்ற கொடிய மிருகங்கள் வாழும் ஆப்பிரிக்கக்

காடுகளிலும், புதர்களிலும் இப்பறவை வாழ்கிறது. நீண்ட புதர்களில் பதுங்கியும், புழு, பூச்சிகளைத் தின்றும் இது தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறது. முட்டைகளைக் குறிப்பிட்ட இடத்தில் போட்டுவிட்டு இரை தேடுகின்ற இடத்திலிருந்தே முட்டைகளை நோட்டம் விடும் புத்திக் கூர்மை இதற்கு உண்டு. காட்டு மனிதர்களோ, ஏனைய விலங்குகளோ தனது முட்டையினைக் கவர்ந்து விடாமல் ஓடி வந்து விரோதிகளைக் கொத்தி அதனைக் காப்பாற்றிவிடும். சுமார் ஐந்து அடி உயரமுள்ள இப்பறவைகள் மணிக்கு சுமார் இருபது மைல் வேகத்தில் ஓடக்கூடியவை. நெருப்புக் கோழியின் முட்டை ஒவ்வொன்றும் அரை அடி நீளமும் ஒரு கிலோ எடையும உள்ளவை. பறவைகளில் இதன் முட்டையே மிகப் பெரியதாகும். வெள்ளைக் கல்லைப் போன்று திடமானதாக இருக்கும் இந்த முட்டைகளை எளிதில் உடைத்து விட முடியாது. ஓநாய்களும், கரடிகளும், சிறுத்தைகளும் முட்டைகளை விரும்பி உண்ணும் இயல்புள்ளவை. அவற்றின் பற்களுக்குப் பிடிபடாமல் இந்த முட்டைகள் நழுவி விடும் தன்மை உடையவை. ரிச்சர்டு எஸ்தஸ் என்ற விலங்கியல் ஆய்வாளர் நெருப்புக் கோழியின் முட்டைகளை சிங்ககூட்டத்திலேயே போட்டுப் பார்த்தார். சில சிங்கங்கள் கால் நகங்களால் பிறாண்டிப் பார்த்தன. முட்டை நழுவிக் கொண்டே இருந்தது. கல்லைப் போன்று உருண்டோடியது. சிங்கங்கள் விட்டுவிட்டுப் போய் விட்டன. நெருப்புக் கோழியின் முட்டைக்கு இப்படியொரு இயல்பான பாதுகாப்பு இல்லையென்றால் அந்தக் கோழியின் இனமே அழிந்து விடுமே!

பாரதியாரும் தமிழ்ச்சங்கமும்

''தமிழ் நாட்டைப் பற்றி எழுதப்படும் சிறப்பான பாடலுக்குப் பரிசளிக்கப்படும் என்ற மதுரைத் தமிழ்ச் சங்க விளம்பரத்தைக் கண்ட நண்பர்கள் பாரதியாரிடம் சொல்லி எழுதத் தூண்டியதால் பிறந்த பாடல் தான் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாடல்''

— 'பாரதிதாசனின் கதைப் பாடல்கள் ஆய்வு' என்ற நூலிலிருந்து.

இந்தியாவில் பொறிஇயல் கல்லூரிகள்

கடந்த ஒரு ஆண்டு காலமாக பல்வேறிடங்களில் தனிப்பட்ட நிறுவனங்கள் தொழிற்கல்வி நிலையங்களை (polytechnic) திறந்-துள்ளன. பொறிஇயற் கல்லூரிகளையும் கூட, தனிப்பட்டோர் திறப்பதற்குத் தமிழக அரசு வழிவகை செய்து தருமென்று தெரிகிறது. இத்தகைய தனியார் கல்லூரிகளில் இனமும், பணமும் வேலை செய்யும் போது, கல்வித்தரம் கீழேபோய்விடுமோ என்று அச்சப்பட வேண்டியுள்ளது. அத்தோடு பொறிஇயல் பட்டதாரிகளிடையும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி விடும் என்பது உறுதி.

இன்றைய நிலையில் நமதுநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் அனைத்துப்பிரிவுகளிலும் 25,000 பொறி இயல்பட்டதாரிகள் வெளி-வருகின்றனர். இவர்களில் உடனடியான வேலை வாய்ப்பு பதினை-யாயிரம் பேருக்குத்தான் உறுதி எனவே ஒவ்வொரு ஆண்டிலும் பல்லாயிரக்கணக்கோர் வேலையின்றித் தவிக்க வேண்டிய நிலை ஏற்படும். தனிப்பட்ட தொழில் துவங்குவதற்கு அரசினரும், வங்கி-களும் உதவி செய்தாலும், வேலையற்றோரின் எண்ணிக்கையினைப் பெருமளவில் குறைத்து விடமுடியாது 1977 - ஆம் ஆண்டில் அர-சினரால் நிறுவப்பட்ட பொறிஇயல் குழுவினரும், தொடர்ந்து பொறி இயல் கல்லூரிகளைத் திறப்பது குறித்து அரசினர் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தான் பரிந்துரை செய்துள்ளனர். இப்-போதுள்ள நிலையிலேயே, 1986 - ஆம் ஆண்டில் இந்திய நாடெங்-கணும் இருபதாயிரத்து மேற்பட்ட பொறிஇயல் பட்டதாரிகள் வேலை-யின்றி இருப்பர் என்று தெரிகிறது இவை அனைத்தையும் கருத்திற் கொண்டு கர்நாடக மாநிலத்தைதைப் போன்று தனியாரும் பொறி இயல் கல்லூரி திறக்க அனுமதி வழங்குவது பொருத்தமற்றது. மைசூர் மாநிலத்தில் இந்தியாவிலேயே அதிகமாகவும், தனியார்களால் நடத்தப்படுவதுமாக 32 பொறி இயல் கல்லூரிகள் உள்ளன.

அருந்தமிழ் ஆய்வும் ஆங்கில மொழிபெயர்ப்புகளும்

நன்றி : கணையாழி
சூன், 1984

தமிழ்நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் வளர்ச்சிக்கழகம் ஒரு திட்டம் அறிவித்தது. அதன்படி பிறநாட்டு நல்ல நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படும் எனப்பட்டது. குழுவின் தலைவர் காலஞ்சென்ற நீதிபதி மகராஜன். திட்டத்தின் தற்போதைய நிலை என்ன? அறிந்தவர்கள் தெரிவிக்கலாம்.

தமிழ் இலக்கியத்தைப் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு நோக்க ஆங்கில மொழிபெயர்ப்புகள் மிக அவசியம். ஆனால் இந்தத் துறையில் அக்கறையுடன் ஈடுபடவேண்டிய தமிழ் நாட்டில் வாழும் ஆங்கிலப்பேராசிரியர்கள் மெத்தனமாய் இருக்கும் போக்கு பிடிபடவில்லை.

அவர்கள் முயற்சியில் பெரிய இயக்கமாய் வளர்ந்திருக்க வேண்டிய இந்த மொழிபெயர்ப்புத்துறை நிறுவன ஆதரவு இன்றி ஒரு சில தனிப்பட்ட மனிதர்களின் சொந்த முயற்சியை மட்டுமே மூலதனமாகக் கொண்டு மிக மெதுவாக வளர்கிறது.

தமிழ்ப்பேராசிரியர்களின் நவீன இலக்கியப்பணி எப்படி இருக்கிறது? ஒரே நேரத்தில் ஆச்சரியம், பிரமிப்பு, பச்சாத்தாபம் நகைச்சுவைஉணர்வு அனைத்துமே ஊட்டும் விதத்தில் வளர்ந்துள்ளது.

தமிழ்வாணனின் துப்பறியும் நாவல்கள் பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதி ஒரு தமிழ்ப்பேராசிரியை டாக்டர் பட்டம் பெற்றுள்ளாராம். பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டும் என்ன? சங்க இலக்கியத்தில் மட்டும் என்ன? சங்க இலக்கியத்தில் தாவர வகைகள் போன்ற ஆய்வு வரைவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பது உண்மை தான்.

இதே ரீதியில் போனால், நவீன தமிழ் நாவல் இலக்கியத்தில் சுஜாதாவின் சர்வ லகு பாணி, பி.வி. ஆர் நாவல்களில் பாலக்காட்டு தமிழ், சாண்டில்யன் 'சரித்திர நவீனங்களில், சரச, சல்லாப, சிருங்கார சம்போக வர்ணனைகள் — இந்த ஆராய்ச்சியை தமிழ்த்துறைதம்பதிகளான பேராசிரியர்கள் கூட்டு முயற்சியாய்ச் செய்யலாம்- ஆகிய தலைப்புகளிலும் டாக்டர் பட்டம் பெற முயற்சிகள் மேற்கொள்ளலாம். மேலும் தலைப்புகளுக்கு [கல்லூரிகள் பல்கலைக்கழகங்களை] அணுகவும்.

நூல் மதிப்புரை

தமிழ் இடப் பெயராய்வு

ஆசிரியர் : டாக்டர் கி. நாச்சிமுத்து

வெளியீடு : சோபிதம் பதிப்பகம் நாகர்கோவில்

முதற்பதிப்பு : 1983

விலை : ரூ 24/- பக்கங்கள் : 213 + xx

'இடப்பெயராய்வுத்துறை' வளர்ந்துவரும் துறை. டாக்டர் கி. நாச்சிமுத்து பதினோரு ஆண்டுகளுக்கு முன் கொங்குநாட்டு இடப்பெயராய்வு குறித்து ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றவர். அத்துடன் இரண்டாண்டுகள் ஜெர்மனி சென்று இடப்பெயராய்வு அறிவை உலகந் தழுவிய அளவில் கற்றவர். டாக்டர் இரா.பி. சேதுப் பிள்ளையின் *தமிழகம் ஊரும் பேரும்* இத்துறையில் முன்னோடி நூல். அதற்கு முன்னதாகவே *சிவத்தல மஞ்சரி* என்றொரு நூலும் 1923 இல் தி. அ. முத்துசாமிக் கோனார் பதிப்பித்த *கொங்குமண்டல சதகம் - மூலமும் உரையும் கொங்குமண்டல ஊர்த்தொகையும் உரையும் சேர்த்தது* என்ற நூலும். இத்துறையில் குறிப்பிடத்தக்க நூற்கள். என்ற போதிலும், மதிப்புரைக்குரிய இந்த நூல் அறிவியல் நெறிப்படி இடப்பெயராய்வு நெறி முறைகளை விளக்கி அக்கோட்பாடுகளைப் பொருத்திக் காட்டும் முதல் நூலாகத் திகழ்கிறது.

இந்த நூலின் பதினான்கு கட்டுரைகளுள் இடப்பெயராய்வு நெறிமுறைகள் என்ற முதற் கட்டுரை நூலின் மூன்றில் ஒரு பகுதியைப் பெற்றாக உள்ளது பெயர் ஆய்வு. இடப்பெயராய்வு எனும் புதிய துறைகளுக்கு உரிய சிறப்பான நெறிமுறைகளை அடிப்படைச் செய்தி களை அது ஆழமாக விளக்குகிறது. இடப்பெயராய்வின் வரலாறு, ஆய்வு மூலங்களைத் திரட்டல், களஆய்வு செய்தல், அட்டைகளில் எழுதி வகைப்படுத்தல் என்ற அனைத்தையும் விளக்குகிறது. இடப்பெயர்களைத் தொகுத்து அகராதி, பரப்பு வரைபடம், இடப்பெயர் ஆவணக் காப்பகம் என்பவற்றை உருவாக்க வேண்டும் என்று கூறுவ தோடு இத்துறையில் ஆய்வு செய்வோருக்கு இருக்க வேண்டிய பிற துறை அறிவு (மொழியியல், இலக்கணம், இலக்கியம், வரலாறு, தொல் பொருள் ஆய்வு, நிலவியல், சமூகவியல், மானிடவியல்,

நாட்டுப் புறவியல் போல்வன) பற்றியும் ஆசிரியர் விளக்குகிறார். மேலும் மேல்நாட்டு ஆய்வு மையங்களில் ஆய்வு மூலச்சான்றுகளைத் திரட்டி எழுதிவைக்கும் சிறு சிறு துண்டுத் தாள்களைக்கூட இன்னும் பேணி வருவதைக் கூறி. தமிழக ஆய்வு மையங்களில் காணப்படாத இந்நிலையை ஆசிரியர் அனுபவ அறிவுடன் சுட்டிக் காட்டுகிறார் (ப 5 - அடிக்குறிப்பு).

சில கட்டுரைகள் (3, 4 5) ஆய்வு நெறி முறைகள் அடிப்படையில் கோட்பாடுகளையும் சில கட்டுரைகள் (2, 10) ஊர்ப்பெயர்களின் இலக்கணம் பற்றியும் விரிவாகப் பேசுகின்றன. பழைய இலக்கியங் களில் காணப்படும் ஊர்ப்பெயர்களை வகைப்படுத்தி பகுப்பாய்வு செய்வதாக உள்ள கட்டுரைகள்-8 9, 14. இரண்டு கட்டுரைகள் (11, 13) இத்துறை ஆய்வின் முன்னோடி நூல்கள் இரண்டை மதிப்பீடு செய்வதாக உள்ளன. கட்டுரைகள் அனைத்தும் தேவையான அடிக்குறிப்புகளுடனும் விளக்கங்களுடனும் அமைந்துள்ளன.

எனினும், இத்தகு சிறந்த நூலின் அமைப்பில், கூறியது கூறல் பலவிடங்களில் வருகிறது. பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாக உள்ளபடியால் அப்படி அமைந்து விட்டதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. சான்றாக, சங்க இலக்கிய ஊர்ப்பெயர்கள் பற்றிய ஆய்வை ஒரே கட்டுரையாக அமைத்து எழுதியிருப்பின் இக்குறைபாட்டினைத் தவிர்த்திருக்கலாம். சில கட்டுரைகள் முடிவில்திடுமென்று பாதியில் நின்றாற்போல உள்ள அமைப்பு காணப்படுகிறது. அனைத்திற்கும் மேலாக இவ்வளவு நுட்பமாக இடப்பெயராய்வைக் கூறும் ஆய்வுநூலில் பிழைகள் மிகுதியாக உள்ளன (ஆசிரியரே 5 பக்கங்கள் - பக். 195-199) பிழையும் திருத்தமும் தந்து உள்ளார். நூலின் ஆசிரியர் உரையிலும் இது பற்றிக் குறிப்பிடுகிறார். இன்னும் சற்றுக் கவனமாக இருந்திருப்பின் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம்.

இடப்பெயராய்வு என்னும் புதிய துறையினை அறிமுகப்படுத்தும் இந்தநூல் நம் பாராட்டிற்கு உரிய நூல். இத்துறை பற்றிய ஆய்வு செய்வோருக்கும் புதியன கற்க விழைவாருக்கும் இது நல் விருந்தாகும்.

டாக்டர் சு. வேங்கடராமன்

பைந்தமிழ்க் காவலர் பெரியசாமி

— டாக்டர் ச. சாம்பசிவன், எம். ஏ., பிஎச். டி., மதுரை.

தோற்றுவாய் :

'கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' எனும் மணிவாசகர் திருவாக்கு, இம்மாநகர் மதுரைக்கும் மாண்பார் செந்தமிழுக்கும் உண்டான தொடர்பைப் புலப்படுத்தும். வேற்றவர் வருகையாலும், தமிழர்களின் தாய்மொழிப் பற்றிலாத் தன்மையாலும், உலகமுழுதும் செங்கோலோச்ச வேண்டிய ஒண்டமிழ், தாழ்வுற்றுப் பாழ்பட்ட நிலைக்கு உள்ளானது. நிலைகெட்ட தமிழரை எண்ணி எண்ணி, நெஞ்சு பொறுக்காது கலங்கி நின்றார் கன்னித் தமிழ்க் காவலர் ஒருவர்! அவரே, வள்ளல் பாண்டித் துரைச்சாமித் தேவர்! மூவேந்தர் மடியினிலே முறைமையாய்த் தவழ்ந்து வளர்ந்த இம் முத்தமிழுக்கெனச் சங்கம் கண்ட பங்கமிலாப் பெருந்தகையே இவர்! சங்கத்து முகப்பிலே நின்று, தம் இருகரம் நீட்டி, மாணவர்களையும் மற்றோரையும் தமிழ் பயில வருமாறு வரவேற்ற மாண்பாளர்! செம்மைத் தமிழின் இன்றைய எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் வித்திட்ட பெருமை இவரையே சாரும்! இவரால் தோற்றுவிக்கப்பட்ட மதுரை தமிழ்ச் சங்கம், நான்காம் தமிழ்ச்சங்கம் என நானிலம் புகழுமாறு ஏற்றம் பெற்றது. இச்சங்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டோர் பலர். அவருள் ஒருவர்தாம், அண்மையில் மறைந்து அமரநிலை பெற்ற டி.பி எம். பெரியசாமி!

பெற்றோர் :

மதுரைக்கு அருகே, வையையாற்றங் கரையிலமைந்த அழகிய சிற்றூர்களில் கோச்சடையும் ஒன்று! இவ்வூரிலே, எக்குலத்திற்கும் தாழ்வில்லா முக்குலத்தோர் வழியினிலே, தாளாண்மை மிக்க வேளாண்மை செய்து வந்தவர்களில், முன்னின்றவர் திரு.தொ.பெ. முத்துக்குமாரத் தேவர். இவருக்கு மனைவியர் இருவர். மூத்தவர் சீனியம்மாள்; இரண்டாமவர் இராதா அம்மையார். மூத்தவராகிய சீனியம்மாள், இரு மக்களைப் பெற்று, இளம்வயதிலேயே இறையடி எய்திவிட்டார்! இரண்டாமவராகிய இராதா அம்மையாருக்கு மக்கள் எழுவர்.

சீனியம்மாள் பெற்றெடுத்த இருவரில், முதல்வரே டி.பி.எம். பெரியசாமி. இவர், தோன்றிய நாள், 29-9-1934. சின்னஞ் சிறு வயதிலேயே பெற்ற அன்னையை இழந்தாராயினும், அவ்வருத்தம் சிறிதுமின்றி இவரை வளர்த்து ஆளாக்கிய சிறப்புச் சிற்றன்னையார் இராதா அம்மையாருக்கே உரியது. தாம் ஈன்றெடுத்த எழுவரோடு, பெரியசாமியையும் அவர்தம் உடன்பிறப்பாம் இலட்மியையும் சேர்த்துத் தம் மக்களைப் போலவே பேணிக்காத்தார்.

பள்ளிப்படிப்பும் தேவரவர்கள் தொடர்பும் :

டி.பி.எம். பெரியசாமி, மதுரைக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில், பள்ளியிறுதி வகுப்புவரை பயின்றார். இவரின் செயல்திறனை அறிந்த மாணவர்கள், இவரைப் பள்ளி மாணவத்தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். பயிலும்போதே. தமிழன்னை பெற்றெடுத்த தவமகன்-பசும்பொன் சிங்கம் உயர்திரு உ. முத்துராமலிங்கத்தேவரவர்களின் பேரன்புக்கு உரியவரானார். எனவே தம் பள்ளி மாணவர் மன்றத்திற்குத் தேவர்களை வரவழைத்துப் பேசச் செய்தார். அன்று முதல் இறுதிவரை திரு. தேவரவர்களின் நெருங்கிய நட்பிற்குரியவராய் விளங்கினார் டி. பி. எம். பெரியசாமி!

'யான் மன அமைதியின்றித் துன்பப்படும் வேளையெல்லாம் திரு. தேவரவர்களைக் கண்டு பேசுவேன். என் மனம் மகிழும்; துன்பம் பறந்தோடிவிடும்!' என்று டி.பி.எம். கூறியதிலிருந்து இவ்விருவர்தம் நட்புப் புலனாகும்.

தொண்டுகள் :

தொடக்ககால முதற்கொண்டு இதுவரை 'அகில இந்திய பார்வர்டு பிளாக்' கட்சியிலேயே இருந்து பணிபுரிந்த சிறப்பும் டி.பி.எம். அவர்கட்கு உண்டு. அக்கட்சியில் 1963 முதல் 1972 வரை மாநிலப் பொதுச் செயலாளராக இருந்துள்ளார்.

1977-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் மதுரை மேற்குத் தொகுதி வேட்பாளராக நின்று. வெற்றி பெற்றார். 1964 முதல் 'கோச்சடை விவசாயக் கடன் வங்கி'யின் தலைவர் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்திவந்துள்ளார்.

டி.பி.எம். பெரியசாமி அவர்கள் ஆற்றிய பலதிறத் தொண்டுகளில் குறிப்பிடத் தக்கவை சில: தமிழகச் சட்டமன்றத்தில், முதன் முதலாக நுழைந்த போது, தமிழக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் சமயத்தில், ' உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவு, மதுரை மாநகரத்தில் செயல்பட வேண்டும்'' என வற்புறுத்திப் பேசினார் இவர்! இதுவே, சட்டமன்றத்தில் இவர் பேசிய கன்னித்தமிழ்ப் பேச்சு! அவ்வாறே மதுரைக்குத் 'தொலைக்காட்சி நிலையம்' வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

வையைப் பெருவெள்ளத்தால் மதுரை மக்கள் தவித்த போது விரைந்து சென்று, அவதியுறும் மக்களுக்கு உடனடியாகத் தங்க இடமும், உண்ண உணவும், பிற வசதிகளும் செய்து கொடுக்க முன்னின்றார். குடிசைவாழ் மக்கள் அனைவர்க்கும் வீடுகட்டித் தரவேண்டும் என்பது இவருடைய கோரிக்கைகளில் ஒன்றாகும்!

கமுதி முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியின் வளர்ச்சி, தடைப்பட்ட காலத்து, இவர், அக்கல்லூரிச் செயலர் பொறுப்பை ஏற்று, மீண்டும் உயர்நிலை அடையப் பாடுபட்டது செயற்கரிய செயலாகும். அக்கல்லூரியில் பலதுறை வகுப்புகளும் ஏற்பட வழிவகுத்தார். பல்கலைக் கழகத்தின் மானியக்குழு உதவிக்கு, வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்தவர் இவர்!

சங்கப்பணி :

எல்லாவற்றிற்கும் மேலாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலராக இருந்து, அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். 'செந்தமிழ்' இதழின் ஆசிரியர் பொறுப்பும் இவர்பாலிருந்தது. சங்கம் நடாத்தும் 'செந்தமிழ்க் கல்லூரி'யை விரிவுபடுத்த விழைந்து, கோச்சடையில் 20 ஏக்கர் நிலத்தைத் தமிழக அரசிடமிருந்து பெறுதற்குரிய வழிவகைகளையும் மேற்கொண்டு வந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் இருந்து வந்துள்ளார். ஆராய்ச்சிக்குரிய ஏடுகளும், தொன்மையான நூல்களும் நிறைந்த தமிழ்ச்சங்க நூலகத்தை விரிவுபடுத்தற்குரிய பற்பல திட்டங்களைச் செயற்படுத்த எண்ணியிருந்தார்.

மனைவியும் மகவும் :

இத்தகு நல்லாருக்கு அருமந்த வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவர் இரஞ்சிதத்தம்மாள். இவ்விருவர்தம் இல்லறப் பயனாய்த் தோன்றியவர், திலகவதி என்ற வேலாயி. இயல்பாகவே தாய்மொழிப் பற்றுடைய டி.பி.எம். பெரியசாமி அவர்கள், திரு. தேவரவர்களின் தொடர்பால் சைவசமயத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவரானார். அதன்பயனாகத் தாம் பெற்ற மகளுக்குத் 'திலகவதி' எனும் சைவத்திருப்பெயர் சூட்டிமகிழலானார். இம்மங்கை நல்லாளின் கணவராக வாய்த்தவர் இரா. அழகுமலை ஆவார்!

புகழோடு வாழ்ந்த பெருந்தகை :

செந்தமிழ் அன்பர் டி.பி.எம். பெரியசாமி அவர்கள், யாரும் எதிர்பாரா நிலையில், அன்பரும் நண்பரும் வருந்த, உற்றாரும் உறவினரும் கதறியழ, ஊரார் அனைவரும் உளம் வெதும்ப, 3-5-1984-இல், அஃதாவது தம் 50ஆம் வயதில், கோச்சடை தமது இல்லத்தில், மாரடைப்பால் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் மறைந்தாலும் அவர் செய்த தொண்டுகளால் புகழுடம்புடன் என்றும் நிலைத்து நிற்பார்!*

''பண்பின் திருவுருவாய்ப் பைந்தமிழின் காவலராய்
நண்பர் பலருக்கும் நல்லுதவி செய்பவராய்ச்
சங்கத்துச் சான்றோராய்ச் சந்ததமும் பாடுபட்டார்!
எம்பெரிய சாமியென்றே ஏத்து''

---

*குறிப்புத்தந்தோர் : டி. பி. எம். உறவினர்கள் திரு. இராமநாதன் திரு. துரைபாண்டி ஆகியோர்.

மணியம் பிரஸ்
சுடலை முத்துப் பிள்ளை சந்து, மதுரை - 9